
விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, தை 19 உ சனி (1-2 69) துல்கஃதா 13 புத்தகம் 23 இதழ் 15




## அரசாங்க சேவையிலிருந்து

# தமிழரை ஒழித்துவிட சூழ்ச்சித் திட்டமா?

## சிங்களப் பரீட்சைக்கு தோற்றியோரும் தோற்ற ஒப்புக்கொள்வோரும் வேலையிலிருந்து விரட்டப்படுவதேன்?

### தமிழ் ஊழியர்களிடையே பரபரப்பு!

சிங்களம் மட்டும் சட்டத்தை ஆயுதமாகப் பாவித்து இலங்கை அரசாங்க சேவையிலிருந்து தமிழ் பேசும் மக்களை இயன்றவரை ஒழித்துக் கட்டிவிடும் முயற்சியில் இப்போது திறைசேரியும் தமிழ் துவேஷம் பிடித்த சில திணைக்களத்தலைவர்களும் இறங்கியுள்ளனரா? இக்கேள்வி இன்று தமிழ் அரசாங்க ஊழியர்களிடையே பெரும் பரபரப்பையும், திகிலையும் ஏற்படுத்தியுள்ளது.

**சிங்களப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சம்மதமளித்தும், சிங்களம் படிப்பதற்கு மேலும் தவணை கோரியும் அரசாங்கத்துக்கு விண்ணப்பித்த ஒரு சில தமிழ் ஊழியர்களுக்கும் வேலைநீக்க அறிவித்தல்கள் அனுப்பப் பட்டுள்ளதைத் தொடர்ந்தே இக் கேள்வி எழுந்துள்ளது.**

சிங்களத் தேர்ச்சி பெறத் தவறியதற்காக துறைமுக கமிஷனைச் சேர்ந்த (இரண்டாம்தர) உதவி வெளிச்ச வீட்டு மேற்பார்வையாளரான திரு. வி. நடராசா என்பவருக்கு வேலை நீக்க உத்தரவு திறைசேரியால் வழங்கப் பட்டுள்ளது. மார்ச் முதல் தேதியிலிருந்து இவர் வேலையை இழக்கிறார்.

சிங்களம் படிக்க தனக்கு விருப்பமிருந்தும், படிக்க வசதியில்லாததால் தேர்ச்சி பெற முடியவில்லையென்றும், சிங்களம் படிப்பதற்கு தமக்கு வசதி செய்து தருமாறும் இவர் அளித்திருந்த விளக்கம் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதே போல, பரந்தன் கிராமசேவகரான திரு. எஸ். கே. இராசையாவுக்கும் அண்மையில் வேலை நீக்க அறிவித்தல் வழங்கப் பட்டுள்ளது. இவர் சிங்களப் பரீட்சைக்குத் தோற்றியும் சித்திபெறாதவர்.

வடக்கு, கிழக்குமாகாணங்களில் வேலை செய்யும் நெசவு ஆசிரியர்களை கூட ஏன் சிங்களப் பரீட்சை எழுத வில்லையென்று காரணம் காட்டுமாறு கேட்கப் பட்டுள்ளதாம். இவர்கள் வேலையில் சேரும்பொழுது சிங்கள நிபந்தனை விதிக்கப் படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இதே போல பியூன்கள் காவலாளிகள் போன்ற சில்லறை ஊழியர்களிடமும் சிங்களத் தேர்ச்சியடையாததற்கு விளக்கம் கேட்கப் பட்டுள்ளதாம்.

திறைசேரியும், சில அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்களாகப் பதவி வகிக்கும் சிங்கள வெறியர்களும், திட்டமிட்டு வேண்டுமென்றே தமிழர்களை அர

(9-ம் பக்கம் பார்க்க)

## மத்திய வங்கியில் மீண்டும் இனவெறியும் தமிழ் ஒழிப்பும்!

இலங்கை மத்திய வங்கியில் மீண்டும தமிழ் ஒழிப்பு வேலைகளும், இன வெறியும் அதிகரித்து விட்டதென்று தெரிகிறது. மத்தியவங்கி வெளியிடுகின்ற தமிழில் வெளியிடாமல் செய்வதற்கு திட்டமிடப்பட்ட சூழ்ச்சிகள் அங்கு நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது.

மத்தியவங்கியின் தமிழ் மொழிபெயர்ப்பு வேலைகளைக் கவனிக்கும் தமிழ்ப் பிரிவுக்கு பொறுப்பாக தமிழ் அதிகாரி ஒருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை யென்றும், இதனை காரணமாக தமிழ் வேலைகள் தாமதப்படுகின்றன வென்றும் வங்கி வட்டாரங்களில் பேசப்படுகிறது.

மத்திய வங்கியில் தமிழ் மொழி சட்டவிதிகள் அப்பட்டமாக மீறப்படுவதாய் வும் "சர்வம் சிங்களமயம்" என்ற கொள்கையே கடைப் பிடிக்கப்படுவதாகவும் தெரிகிறது. சிங்களத்தில் மட்டுமே சகல வேலைகளையும் செய்யவும், தமிழ் மொழியை முற்றாக வங்கி அலுவல்களிலிருந்து நீக்கிவிடவும் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவாம்.

### செய்தித் திரட்டு


மத்திய வங்கியின் மாதாந்த செய்தித்திரட்டு 1968 மார்ச்சுக்குப் பின்னர் ஏறத்தாழ ஓர் ஆண்டாக தமிழில் வெளியிடப் படவில்லை என்று தெரிகிறது. அதேவேளையில் சிங்கள ஆங்கில செய்தித்திரட்டுகள் தவறாது வெளிவருகின்றன.

செய்தித்திரட்டைத் தமிழில் வெளியிடச் செய்வதற்கு கிளிநொச்சி. பா. உ. வும், மத்திய வங்கித் தமிழ் ஊழியர் மன்றமும், இலக்கிய மன்றமும் மற்றும் பலரும் முன்னர் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஆண்டறிக்கை

1968-ம் ஆண்டுக்குரிய வங்கியின் ஆண்டறிக்கை

(4-ம் பக்கம் பார்க்க)




## இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எங்கே நீ போனாலும் அங்கே உன்னோடு!

## அத்தியாயம்-4

தியாகந்தான் காதற் கோட்டையின் அஸ்திவாரம் என அவன் எங்கோ படித்திருந்தான். அந்தவகையில் தான் உமாவும்செயலாற்றி வருகிருள் என்பதை ரகு மிகவும் எளிதில் புரிந்து கொண்டான். ஒரு பெரிய இடத்துப் பெண் தான் விரும்பும் ஒருவனின் சொல்லே மதித்து தன் சொந்தவிருப்பு வெறுப்பிற்கு இடமின்றி தன்னையே முற்றிலும் மாற்றியமைத்துக் கொண்டதை எண்ணிய போது அவளுக்காக இந்த உலகத்தில் எதை வேண்டுமானுலும்செய்யலாம் என்ற மனப்பான்மை ஏற்பட்டது ரகுவுக்கு:

இப்படிப் படிப்படியாக ஆரம்பித்த அவர்கள் நட்புக் கனிந்து காதலாகப் பரிணமித்தபோது அவர்கள் தனிமையை விரும்பி இரவு வெகு நேரங் கழிந்தபின் யாருக்குந் தெரியாமல் பின்புறத் தோட்டத்தில் சந்திக்கத் தொடங்கினர். எல்லோரும் தம்மைமறந்து ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும போது இவர்கள் மட்டும் பின்புறம் அமைந்துள்ளது கலட்டியில் பல மணிக்கணக்காக இருந்து பேசுவார்கள். ஆயினும் ஒரு போதாயினும் அவர்கள் நெறிதவறியதில்லே.

''ரகு'' என்பாள் அவள். ''என்ன உமா'' என்பான் அவன்அவளே அருகில் அணேத்தபடி. ''எவ்வளவு அன்பாக இணேந்திருக்கிருேம் பார்த்தீர்களா...? இனி எம்மை எவராலுமே பிரிக்கமுடியாது!' என்று குழைவாள் அவள்.

''இணேப்பு இறுக்கமாகத் தான் உள்ளது. ஆனுலும் எனக்கென்னவோ எமது உறவைப்பற்றி நினேக்கும் போது அச்சமாகத்தான் இருக்கிறது. பறக்க இழந்தவன் ஒடியல் தின்ன ஆசைப்படுவது எவ்வளவு தப்பிதமோ அதுபோல ஒரு வித தகுதியும் அற்ற நானும் உன்னே அடையவேண்டும் என்று நினேத்ததே தவறு தானே உமா. இது உனக்கு தகாத உறவு மறந்துவிடு என்கிறது அறிவு. ஆனுல் மறக்க முடியாமற் தவிக்கிறது மனம். உன் பெற்ருேருக்கு எமது உறவு தெரிய வந்தால் அவர்கள் இதற்கு நிச்சயமாகச் சம்மதிக்கப் போவதில்லே.

''ஊஹூம்! இன்பமான நேரத்தில் எதற்காக இப்படிப் பேசுகிறீர்கள். எம்மைக் கடவுள் எப்படியாவது ஒன்று சேர்த்து வைப்பார். அபசகுனம் போல நீங்கள் வேண்டாததை எல்லாம் பேசி என்னேயும் கவலேக்குள்ளாக்காதீர்கள். இப்போ நாங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிருேம் ரகு... எமது வாழ்நாள் முழுதுமே இப்படியிருந்துவிட்டால்...?

''உம்...... நிஜமாகவா உமா...? இந்த ஏழையின் மேல் உனக்கு அத்தனே கொள்ளே அன்பா... என்று கூறிக்கொண்டே அவன் அவளே நெருங்குவான். அந்த அன்புச் சிறைக்குள் கைதியாகாமற் தப்பித்துக் கொண்டே தன் வெற்றிப் பெருமிதத்தை 'களுக்' என்று சிரித்து வெளிக்காட்டுவாள் அவள்.

''தப்பிவிட்டேன் என்ற கர்வமாக்கும்... எப்படியோ ஒருநாள் என் அன்புப்பிடிக்குள் அகப்படவேண்டியவள் தானே நீ...?'' என்று கூறி அவனும் அவளுடன் சேர்ந்து சிரிப்பான்.

இப்படியாகக் கடந்த குறுகிய காலத்துக்குள் அவர்கள் இருவரும் இன்பமாகச் சந்தித்த சம்பவங்கள் அநேகம்! அவற்றை எல்லாம் அவன் மறந்துவிடமுடியுமா...?

உலர்ந்த வர்ணம்போல அந்த இனிய நினேவுகளும் அவன் மனதில் அழியாத ஓவியமாகிவிட்டன. நினேவு என்ற வர்ணத் தூரிகையால் எண்ணங்களேக் கொண்டு அழகுப் பிம்பமாக அவன இதயத்தில் செதுக்கப்பட்டு விட்ட அந்தப் பளிங்குச் சிலேயை அவனுல் அழிக்கவும் முடியாது மறைக்கவும் முடியாது.

ஆயினும் இன்றைய நிலேயில் அவன் அவளே மறந்து தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டிருக்கும போது அந்த இனிய நினேவுகளும் மாண்டு மண்ணேடு மண்ணுகப் போக வேண்டியவைதானே! ஐந்து வயதில் அறியாதப் பருவத்தில் இருந்து அவனே எடுத்து வளர்த்துவந்த சின்னேயாவின் வார்த்தைகளுக்கு அவன் மதிப்புக் கொடுத்து தான் ஆகவேண்டும். அது அவனது கடமை ''எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லே செய்நன்றி கொன்ற மகற்கு'' என்பது வள்ளுவர் வாக்கு. ஒரு உற்ற தந்தையின் ஸ்தானத்தில் இருக்கும் சின்னேயாவின் மனம் புண்படும்படி அவன் நடக்கவும் மாட்டான்; நடக்கவும் கூடாது.

அப்படித்தான் இல்லேயென்று சின்னேயாவின் சொல்லேத்தட்டிப் போனுற் கூட உமா அவனுக்குக் கிடைக்கக் கூடியவள்தானு என்று அவன் மனம் சிந்திக்கத் தொடங்கியது. அப்படியொரு திருமணத்தைக் கனவிற்கூடக் காணத் தகுதியற்றவன் என்ற உண்மையைப் புரிந்துகொண்டான். உமா எவ்வளவு சுலபமாக எழுதிவிட்டாள்...?

எங்கள் திருமணத்தை இரகசியமாக முடித்து விடுவோம் என்ற வரிகள் அவன் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. அவன் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். இத்திருமணம் பகிரங்கமாக நாலு பெரிய மனிதர்கள் மத்தியில் நடக்கக் கூடிய ஒன்றல்ல என்பதை உமாவே உணர்ந்து கொண்டபின்பும் அவன் மனதில் ஒரு சபலம்! அவன் மீண்டும் சிரித்தான். இம்முறை வாய்விட்டுப் பைத்தியகாரத் தனமாகச் சிரித்தான்.

உமாகூடத் தன் அந்தஸ்தின் பெறுமதியை அளந்து தான் எழுதியிருக்கிருள். அந்தஸ்தின் ஏற்றத்தாழ்வை உணர்ந்துதான் திருமணத்தை இரகசியமாக நடத்தும்படி கேட்டிருக்கிருள்...... அவன் தன்னே மறந்து பெருமூச்செறிந்தான்.

''ரகு... தம்பி... ரகு'' கிழவரின் குரல் வெளிப்புறமிருந்து ஒலிக்கிறது'' அவன தன் கையில் இருந்த உமாவின் துண்டுக் கடிததத்தை சட்டைப் பைக்குள் மறைத்துவிட்டு எழுந்துசென்று கதவைத் திறக்கிருன்.

சின்னேயா கலவரம் நிறைந்த விழிகளால் அவனேப் பார்க்கிருர். அவர் கண்களில் நீர் கோர்த்துள்ளது. 'உன் மனதை மிகவும் நோகச் செய்து விட்டேனுக்கும் ரகு... நான் என்ன செய்யட்டும்? என் மனத்தில் பல மணிநேரம் நடந்த போராட்டத்தின் பின் உன் நன்மையையும் எதிர்காலத்தையும் உத்தேசித்தே இதை உன்னிடங் கூறத் தீர்மானித்தேன். நீ பயப்படவேண்டாம் ரகு. என் பிள்ளேகளுக்குக்கூட இதுபற்றித் தெரிய வராது. அவர்கள் தெரிந்து கொள்ளவும் கூடாது. அந்த வகையில் நீ என்னேக் கடைசிவரை நம்பலாம். ஆயினும் உனக்கு இன்னுமொரு புத்திமதி கூறவிரும்புகிறேன் ரகு. நீ பிடித்திருப்பது பெரிய கொப்பு. அதில் தொற்றி ஏறிக்கொள்வது மிகவும் கடினம் அதனுல் அந்த முயற்சியைக் கைவிட்டுவிடு. ஏற முயன்று தற்செயலாகத் தவறி விழ நேர்ந்தாலும் அந்த வீழ்ச்சியை உன்னுல் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கும். அதனுல் எதையும் சிந்தித்துச் செய் ரகு. இப்போது நீ மிகவும் களைத்திருக்கிருய். உன மனவேதனே மாறுவதற்காக நீ எங்காவது வெளியே உலாவிவிட்டு வாப்பா......!'' என்று பாசத்தோடு கூறிவிட்டு அப்பால் நகர்ந்து கொண்டார் சின்னேயா.

சின்னேயா அநுபவம் மிக்கவர். கடந்த அறுபது ஆண்டுகளாக இந்த உலகத்தின் மேடுபள்ளங்களே நன்ருக அளந்து வைத்திருப்பவர். அதனுல் அவர் கூறியதில்

நமது தொடர்கதை

எந்தவிதமான தவறும் இருக்க முடியாது என்பதே ரகுவின் கருத்தும்; பெற்ற தந்தையைவிட மேலான பாசத்துடன் அவர் அவனுக்குப் புத்தி கூறிவிட்டார். எவ்வளவு பரந்த மனப்பான்மை. தான் பெற்ற பிள்ளேகளுக்குக்கூடக் கூற மாட்டேன் என்கிருரே! இந்தக் காலத்தில் இப்படி ஒருவரைக் காண்பதே அரிது தான். அந்த ஒரு மகிழ்ச்சி ஒரு கணநேரம் அவன் மனதில் இருந்த துன்பத்தையெல்லாம் மறக்கச் செய்தது. அந்தப் பெருமிதத்தில் அவன் உள்ளம் விம்மிப் பூரிப்படைய உலவுவதற்காக வெளியே சென்ருன் அவன்.

தன் வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் உள்ள சின்னப் பிள்ளேயார் கோயிலடிவரை சிறிது உலவப்போகலாம் என்ற நினேவில் வெளியே இறங்கி நடந்தான். வழக்கமாக அவன் போகும் இடந் தான் அது. என்ருலும் நாளாந்தம் அவன் மனதில் இருக்குந் துடிப்பும் மகிழ்ச்சியும் அன்று இருக்கவில்லே. பலசிந்தனேகளின் மத்தியில் அவன் கோயிலடிவரை நடந்துசென்றுவிட்டுத்திரும்பிக் கொண்டிருந்த சமயம் அவன் சமீபத்தில் அவனே உராசியபடி நின்றது ஒரு மோட்டார். அந்தக் கிராமாந்தரப்பகுதியில் அப்படியொரு பெரிய காருக்குச் சொந்தமானவர் ஏகாம்பரம் மட்டுந்தான் என்பது அவன் அறிந்த உண்மை. ஆகவே அவன் ஆச்சரியப்பட்டதில் எந்தவிதத்தவறுமில்லேத்தான்.

உமாதான் தனது சிறிய தம்பியோடு வழக்கமான 'ஈவினிங் ட்றைவ்' போய் விட்டு வருகிருளாக்கும் என்ற எண்ணத்தில் நிமிர்ந்த அவன் விழிகள் பயத்திஞல் படபடத்தன. உடல் பதறியது. அங்கே 'ஸ்ரியறிங்வீலே அழுத்தமாகப் பிடித்தபடி அவனே ஒரு தினுசாகப் பார்த்து நின்ற ஏகாம்பரத்தைக் கண்டதும் அவனுக்கு என்ன செய்வதென்றேதெரியவில்லே.

அவன் மௌனமாக அவ்விடத்தை விட்டு அகன்றுவிட எத்தனித்தபோது 'இப்படிக் காருக்குள் ஏறிக்கொள் தம்பி. உன்னுடன் தனிமையில் பேசுவதற்குத் தான் ஒரு சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தேன். கடவுள் விட்டமாதிரி நீயே வநது விட்டாய்...ம்...ஏறிக்கொள். கூறிவிட்டு அவர் உட்புறமாகத் திரும்பிப் பின்பக்கக் கதவைத் திறந்தார். அந்த, அதிகாரக் குரலுக்குக் கட்டுப்பட்ட ரகு மறுவார்த்தையின்றி உள்ளே ஏறி அமர்ந்து கொண்டான். அதைத் தொடர்ந்து புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறந்தது கார். எங்கே போகிருேம்... எதற்காகப் போகிருேம்... என்று கேட்கும் துணிவற்று சித்திரப் பாவைபோல் காருக்குள் இருந்த ரகுவின் உள்ளம் வேதனேயால் துடித்தது. வீட்டில் இருந்து நிம்மதிக்காகப் புறப்பட்ட அவனுக்கு இப்படியொரு சோதனே காத்திருக்கவே வேண்டாம்.

திடீர்ப் பரீட்சைக்குத் தன்னே ஆயத்தப்படுத்திக் கொள்ளும் மாணவனின் நிலேயில் இருந்தான ரகு. உமாவின் தகப்பனர் என்ன கேள்விகளேக் கேட்கப் போகிருரோ அதற்கு நான் எப்படிப் பதில் அளிப்பது என்றெல்லாம் சிந்தித்தவனுய் அமைதியின்றி அமர்ந்திருந்தவனின் கண்கள் அந்தக் காரை ஒருமுறை நோட்டம் விட்டன. அந்தப் பெரியகாரில் அமர்ந்திருக்கவே அவன் உடல் கூசியது அதில் இருந்து சவாரி செய்வதற்குத் தனக்கு எந்தவித அந்தஸ்தும் இல்லே என்பதை தீர்க்கமாகமுடிவு செய்தது அவன் உள்ளம்.

அன்று அவன் மனநிலேக்கு அநுதாபந் தெரிவிப்பது போல மந்தாரமும் மப்பும் குடிகொண்டு எங்கும் ஒருவித இருள் சூழ்ந்திருந்தது. இன்னும்சிலமணி நேரத்தில் அவனடையப் போகும் இன்னல்களுக்காகக் கண்ணீர் வடிக்கக் காத்திருப்பது போல் வானத்தையெல்லாம் சூல்மேகங்கள் ஆக்ரமித்துக் கொண்டன. அந்தச் சூழ்நிலேயே ஒரு துர்ச்சகுனம் போல அவனிடம் ஒரு பயங்கரமான மனநிலேயைஏற்படுத்திக்கொண்டிருந்தது.

**பா. பாலேஸ்வரி**

மோட்டார் தன் பாட்டுக்கு வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது. எந்த இடத்தில் அது சென்று நிற்கும் என்ற உண்மை தெரியாதவனுய் அதைக் கேட்குந் துணிவற்று ஒரு எஜமானனுக்குப் பயப்படும் தொழிலாளி போலஅடங்கி ஒடுங்கியிருந்த அவன்நிலேயை எண்ணிப்பார்க்க அவனுக்கே அவமானமாகவும் வேதனேயாகவும் இருந்தது. மண், பெண், பொன் என்ற இந்த மூன்றும் எவ்வளவு கல்நெஞ்சம் படைத்தவர்களேயும பணியவைத்துவிடும் என்ற பேருண்மையை உணர்ந்தான.

ஏகாம்பரம் பணம்படைத்தவராக இருக்கலாம், எஞ்ஜினியராக இருக்கலாம்; அதற்காக அவன எதற்காக அவருக்குப் பயப்பட வேண்டும்...? 'ஏறிக் கொள்' என்று கூறியபோதே 'முடியாது' என்று அவன் மறுத்திருக்கலாம்; ஆனுல் அவன் எதிர் வார்த்தையே பேசாமல் ஏறிக்கொண்டானே... அப்படி எதற்காக நடநது கொண்டான...?

இந்தப் பெரிய படகுக்காரில் ஏறக்கூடியஎத்தனேயோ அரிய சந்தாப்பங்கள் எல்லாம் அவன் காலடிவரை வந்துங்கூடஅவன் அவற்றை எல்லாம் கௌரவமான முறையிற் தட்டிக் கழித்திருக்கிருன். ஆமாம்! பின்னேர வேளேகளில் சிலநேரம் உமா தனது சிறிய தம்பியுடன் 'ஈவினிங் ட்றைவ்' போய்விட்டு வரும்போதெல்லாம் அநேகமாக அவனேத் தெருவிற் சந்திப்பாள். அப்போதெல்லாம் இன்று நடந்ததுபோலவே அவன் அருகில் உரசுவது போல மோட்டார் அவன் பக்கத்தில் கிறீச்சிட்டு நிற்கும். உம்! ஏறிக்கொள்ளுங்கள் ஒரு 'ட்றைவ போகலாம்' என்பாள் அவள். அவளது குழந்தைப்பிள்ளேத்தனமான வேண்டுகோளேக் கேட்டு தன் முத்துப்பல் வரிசைகாட்டிச் சிரிப்பான் அவன். 'இப்போ எதற்காகச் சிரிக்கிறீர்களாம்...? என்று சிணுங்குவாள். அவள்.

சவர்க்காரத்தை நுரையாகக்கரைத்து விட்டு வைக்கோல் புரியொன்றினுல் ஊதும்போது ஆகாயத்திற் பறக்கும் வாயுக கூண்டுகளேப் பிடி பிடி என்று ஒரு பச்சைக் குழந்தைக்கு உற்சாகங் காட்டுவது போல் நீ எனக்குக் காட்டும் உற்சாகத்தை நினேத்துச் சிரித்தேன் என்று விளக்கங் கொடுப்பான் அவன்.

உங்கள் விளக்கமும் நீங்களும்.... எனக்கு நீங்கள் கூறியது ஒன்றுமே புரியவில்லே... ஆமாம்... இப்போ என்னுடன் வரப்போகிறீர்களா இல்லேயா...? என்று பொய்க் கோபத்துடன் கேட்பாள் அவள்.

நான் உன்னுடன் வருவதற்கு எப்போதும் ஆயத்தந் தான் உமா. ஆனுல் காரில் மட்டும் ஏறிக் கொள்ள முடியாது. உயிருடன் போராடும் எத்தனேயோ பரிதாபத்திற்குரிய நோயாளிகளிற் பலர் பஸ் வண்டிக்குக் கூடப் பணம் இல்லாத காரணத்தால் வைத்திய சாலேக்கு நடந்து செல்லும் கொடிய துன்பத்தைப் பார்த்தபிறகும் கூட இந்த 'ஈவினிங் ட்றைவ்' அவசியமான ஒன்று என்று யோசித்துப் பார்த்தால் என் பதிலகூட உனக்குப் புரிந்திருக்கும். ஏனெனில் அந்தப பாட்டாளி மக்களின் கும்பலில் ஒருவன்தான் நானும். இன்று உனது மோட்டாரில் 'ஈவினிங் ட்றைவ்' போகும் நான் நாளேக்கு வைத்தியசாலேக்குப போகக் கூட கார் இல்லாமல் அவதிப்படக் கூடிய நிலேயை உணர்ந்து வாழவேண்டியவன நான் என்று புரிய வைப்பான் அவன்.

அப்போ...நானும் இறங்கி உங்களுடன் நடநது வருகிறேன என்று இறங்கிக் கொள்ளத் துடிப்பாள் அவள். அவளின் களங்கமற்ற உள்ளப்பண்பு அவனே பரவசப்படுத்திவிடும். ஆயினும் அவள விட்டுக் கொடுக்காமல் ''ஐயோ உமா நீமட்டும் இறங்கிவிடாதே. அப்புறம் நான் இந்தஊரில் நிம்மதியாகச் சீவிக்கவே முடி

[9-ம் பக்கம் பார்க்க]




# தமிழரசாரின் அடுத்த நடவடிக்கை என்ன?

# இக்காலப் பெண்களுக்கு 'மினி' மோகம் அதிகரிப்பதேன்?

க. நவரத்தினம்
நெடுங்கேணி

கே: நண்பர்களில் எத்தனை வகையுண்டு. பகைவர்களில் எத்தனை வகையுண்டு?

ப: நண்பர்களை மூன்று வகையினராகவும் பகைவர்களை இரு வகையினராகவும் பிரிக்கலாம். வெறுமனே சிரித்துப் பேசிவிட்டுப் போகும் நண்பர்கள் ஒரு வகை. பணம் இருக்கும் போது நட்புக் கொண்டு அது அற்றுப்போகும் போது மெதுவாகக் கழரும் வெளவால் நண்பர்கள் மற்றோர் வகை. துன்பம் வரும்போது வலதுகை போலவந்து துயர் துடைக்கும் நண்பர்கள் மூன்றும் வகை. இக்காலத்தில் 3 வது வகை நண்பர்கள் எங்கேயிருக்கிறார்கள்?

பகைவர்களிலும் நண்பர்கள் போல நடித்து அடுத்துக் கெடுப்போர் ஒருவகை. நேரிடையாக பகை பாராட்டுவார் மற்றோர் வகை. இரண்டாவது வகையினரை விட முதல் வகையினரால் தீமை அதிகமே!

ஃ

தமிழன்
வெள்ளவத்தை

கே: கே. ஜீ. எஸ். நாயரும், கே. இராஜலிங்கமும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களாக இருந்தார்களா?

ப: தமிழரசுக் கட்சியில் உறுப்பினர்களாக இல்லாவிட்டாலும் மலையகத் தமிழ் மக்களின் உயர்ச்சிக்கு உண்மையுடன் உழைத்த ஊழியர்கள் இவ்விருவருமே!

ஃ

ஆர். சுந்தரராஜ்,
சதர்லேண்ட்.

கே: தமிழர்கள் வாழும் எந்த நாட்டிலும் தமிழர்கள் மீது அன்னிய மொழியை புகுத்துவதன் காரணம் என்ன?

ப: தமிழர்கள் தங்கள் தாய்மொழிக்காகப் போராடுகிறார்களா அன்றி தூங்குகிறார்களா என்பதைப் பார்ப்பதற்காகத்தான்!

ஃ

நவநீதன்,
தம்பிலுவில்.

கே: உலக வாழ்க்கையை வெறுத்தவனை எதற்கு ஒப்பிடலாம்?

ப: கூம்பிவிட்ட மலருக்கு!

ப. ஆறுமுக திலகர்,
காரைநகர்.

கே: டுப் மாஸ்டர் பொன்னம்பலத்தின் வட்டமேசை என்னாயிற்று?

ப: பொதுத்தேர்தல் வரப்போகிறதல்லவா? 'பொலிஷ்' வேலை நடக்கிறது போலும்.

கே: தமிழரசாரின் அடுத்த நடவடிக்கை என்ன?

ப: ஏப்ரல் மாநாட்டில் அறிவிக்கப்படும்!

கே: நல்லைநகர் நாவலர் பிரந்திலரேல்!

ப: அவருக்கு சிலைவைக்கும் பிரச்சினையே தோன்றியிராது!

ஃ

ஆர். கண்ணதாசன்,
நீர்கொழும்பு.

கே: உலகில் மனிதன் செய்யும் மன்னிக்க முடியாத குற்றமெது?

ப: பெற்ற தாய்க்கும் பிறந்த பொன்னாட்டிற்கும் செய்யும் துரோகம்!

கே: ஒரு இலட்சாதிபதியின் பக்கத்தில் ஒரு ஏழை நிற்கும்போது அந்த ஏழை என்ன நினைப்பான்? பணக்காரன் என்ன நினைப்பான்?

ப: ''கொடுத்து வைத்தவர்; வசதியாக வாழுகிறார்'' என்று ஏழையும், ''ஏழைக்கிருக்கும் மனமகிழ்ச்சியும் நிம்மதியும் எனக்கில்லையே'' என்று பணக்காரனும் நினைப்பார்கள்!

ஃ

ஆ. வரலட்சுமி,
அக்கரைப்பற்று.

கே: இந்தக் காலத்துப் பெண்கள் ஏன் மினிஸ்கேர்ட் போடுகிறார்கள்?

# ஜெயப்பிரகாசரைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: எவ்வித ரகசியத்தையும் மறைத்து வைக்க அவர்கள் விரும்பாததால்!

கே: கைத்தலம் என்பதன் பொருள் யாது?

ப: நாலு சாண் கொண்டது ஒரு கைத்தலம்!

ஃ

தமிழ்ச்செல்வன்,
கொற்றாவத்தை.

கே: திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: போட்டியும் பொறாமையும் பதவி ஆசையும் நிறைந்த அரசியலில் சிக்காத தனிப் பிறவி: அவர் கூறும் சர்வோதயக் கருத்துக்களை உலகம் புரிந்துகொள்ள இன்னும் 50 வருடங்கள் பிடிக்கும்!

ஃ

இ. கந்தசாமி,
கைதடி.

கே: மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு இலங்கையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென அறிந்தேன், உண்மைதானா?

ப: உண்மையல்ல — தற்போதுள்ள திட்டப்படி 4வது மாநாடுதான் 1972ல் இலங்கையில் நடைபெறுமாம். 3 வது மாநாடு பாரிசில் 1970 ல் நடைபெறவிருக்கிறது!

கே: இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமையைப் பாதுகாக்க சமஷ்டியா? ஒற்றை ஆட்சியா சிறந்தது?

ப: இன்று இலங்கையில் நடப்பது ஒற்றையாட்சி தானே! ஒற்றையாட்சி தமிழ் மக்களின் உரிமைகளை காப்பாற்றியிருந்தால், இன்று அடிமைகளாக வாழும் நிலை ஏற்பட்டிருக்குமா? தமிழ் பேசும் மக்கள் சம உரிமையுடன் வாழ சமஷ்டியை விட வேறு திட்டம் எதுவுமேயில்லை!

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: இந்திய [illegible] பிரதமர் தமிழகம் செல்லாததேன்?

ப: 'தமிழகம்' இந்தியாவுக்குள் கட்டுப்பட்டுக் கிடப்பதால்!

கே: 1968ல் தமிழரசு செய்த நன்மையான காரியம் ஒன்றைக் கூறுவீர்களா?

ப: திருமலை கோணேசராலய புனித நகர்ப் பிரச்சினையில் தமிழர்களின் மானத்தைக் காத்து, அரசாங்கத்திலிருந்து வெளியேறியதும், அமைச்சர் பதவியை 'திரு' உதறித்தள்ளியதும்!

கே: நீங்கள் மேடைப் பிரசங்கம் செய்வதுண்டா?

ப: அந்தவேலையை பொன்னம்பலத்திடமே ஒப்படைத்து விட்டிருக்கிறேன்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

---

★ 'தொண்டரே வருக' என்று ஓர் கவிதையை 17-1-69 சுதந்திரன் இதழில் கவிஞர் பாண்டியூரன் எழுதியிருந்தார். அக்கவிதைக்கு இங்கு பதிலளிக்கிறார், கவிஞர் செ. குணரத்தினம்.

## பெண்டுகள் புரளியைத் தீர்ப்பதுவோ தொண்டரெம் வேலை?

—செ. குணரத்தினம்—

''தொண்டரே வருக; வந்தெம்
துயர்களைந் திடுக, இந்தப்
பெண்டுகள் உங்கள் சொல்லை
பெருமையாய்க் கேட்பா ராமே.''
என்றெலாம் சொல்லி யங்கே
எந்தனை அழைக்கும் தம்பி
பெண்டுகள் புரளி தீர்க்க
பெற்றேமா எம். பிப் பட்டம்?

நாய்பூனை உறவுச் சண்டை
நடுரோட்டில் கோழிச் சண்டை
காய்பழம் களவுச் சண்டை
கடப்படி, திண்ணைச் சண்டை
தாய்மகள் வீட்டுச் சண்டை
தனம்காணி பூமிச் சண்டை
போசகிடத் தானோ நாங்கள்
பூமியில் எம். பி யானோம்?

பொதுப்பணி, பெண்கள் போடும்
புரளியைத் தடுப்பதாமோ?
இதற்கெல்லாம் எம்பிவந்தால்
எதிர்காலம் என்னவாகும்?
கதையென்ன வென்றால் தம்பி......
கன்னித்தேன் தமிழாள் வாழ
எதையாவ திந்த நாட்டில்
இயன்றதைச் செய்வ தாமே!

அண்டயல் உள்ள வெங்கள்
அம்மைமார் தமிழில் போடும்
சண்டையைக் கேட்டுப் பார்த்து
சகிக்கலாம் தம்பி, எங்கள்
அண்ணன்போல் இந்த ஈழ
அரசினை ஆளும் கூட்டம்
கண்ணுக்குள் மண்ணைத் தூவும்
காட்சியைச் சகிக்க லாமோ?

பொறுத்திட முடியா தப்பா?
போக்கிரித் தம்பி கொஞ்சம்
கருத்தாக எண்ணிப் பாராய்!
கன்னித்தேன் தமிழாள் இந்த
நிலத்திலும் உரிமை யோடு
நிமிர்ந்தவள் நடையைப்போட
தொழில்செய்து வாழ்வ தொன்றே
தொண்டரெம் கடமை தம்பி!

---




## எம்.ஐ.எம். தாஹிர்



சுதந்திரன் மூலம் எழுத்துலகில் இடம் பெற்ற இளைஞர்களில் தானும் ஒருவன் என்று பெருமையுடன் கூறும் திரு. தாஹிர் கிழக்கிலங்கையிலமைந்துள்ள கின்னியாவை பிறப்பிடமாகக் கொண்டவர். விசேட பயிற்றப்பட்ட ஆசிரியர்.

கடந்த ஏழு வருடங்களாகச் சிறுகதை, கட்டுரை, சமயம் முதலிய துறைகளில் தன் கவனத்தைச் செலுத்திவருக்கிறார்.

இதுவரை சுமார் 35க்கு மேற்பட்ட சிறுகதைகளையும், ஒரு சில கட்டுரைகளையும், சில நாடகங்களையும், சமயத் தொடர் கட்டுரைகளையும் படைத்துள்ளதாக கூறுகிறார். இவரது கதைகளில் பல ''சிலதரன்'' என்ற பெயரில் எழுதப்பட்டவை.

பிரபல கவிஞர் ''அண்ணலை'' ஞானகுருவாகக் கொண்டவர். ஈழத்து எழுத்தாளர்களில் வ. அ. இராசரத்தினம், எஸ். பொன்னுத்துரை, எம். ஏ. ரஹ்மான முதலியோரிடம மதிப்பு வைத்துள்ள இவர் தமிழகத்தின் அகிலன், கல்கி, ஜயகாந்தன், சாண்டில்யன், புதுமைப்பித்தன் முதலியோரின் படைப்புக்களையும் விரும்பி வரவேற்பவர்.

எழுத்தாளர்களிடையே கருத்து வேறுபாட்டை விரும்புபவர்; ஆனால், முற்போக்கு, பிற்போக்கையோ, கட்சிச் சார்பையோ, வெறுப்பவர்.

பலாலி ஆசிரியர் கலாசாலைச் சஞ்சிகையின் ஆசிரியராகவும, கிண்ணியா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராகவும், சந்தனாய்க் கலை மன்றத்தின் தலைவராகவும் இப்பொழுது தொண்டாற்றி வருகிறார்.

இலக்கியத்தின் மூலமே சமுதாயத்தின் கோணல் வளர்ச்சியைச் சீர்படுத்தி, இலட்சிய பரம்பரை ஒன்றைத் தலையெடுக்கச் செய்யலாம் என்ற கருத்தில் தமக்கு அசையாத நம்பிக்கையுண்டென அழுத்தமாக கூறுகிறார் இளைஞர் தாஹிர்.

—மகேஸ்

# எண்ணம்

## சுதந்திரதினச் சங்கற்பம்!

இம்மாதம் 4ந் திகதி இலங்கையின் 21வது சுதந்திர தினமாகும். இதை வேறுவார்த்தைகளில் கூறப் போனால், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை 'எஜமானமாற்றம்' நிகழ்ந்து 21 ஆண்டுகள் முடிந்து விட்டன. வெள்ளைக்கார எஜமானிடமிருந்து சிங்கள எஜமானுக்கு தமிழ் பேசும் மக்கள் அடிமைகளாக்கப்பட்டு 21 ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன.

ஆம், தமிழ் பேசும் மக்களை ஆளப்படும் இனமாகவும், சிங்கள மக்களை ஆளும் இனமாகவும், மாற்றியமைப்பதற்கு வழி வகுத்த நாள் தான் பெப்ரவரி 4. இந்த நாளை, இந்நாட்டு தமிழ் பேசும் மக்கள் கரிநாளாக — துக்க நாளாக- கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு 1965 வரை கொண்டாடி வந்ததை இந்தநாடு மட்டுமல்ல அகில உலகுமே அறியும்.

குறிப்பாக 1956ம் ஆண்டு முதல் 1965 வரை தமிழ்ப் பிரதேசமெங்கும், ஆக்ரோஷத்துடன்—மூர்த்தண்யத்துடன் இலங்கையின் சுதந்திரத்திருநாள் கரிநாளாக அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமையைப் பிடுங்கி, தமிழ்ப் பிரதேசமெங்கும் தனிச் சிங்களத்தை திணித்து விட அன்றைய ஆட்சியாளர்கள் எடுத்த முயற்சிகளை முறியடிக்கக்கூடிய எதிர்ப்பியக்கத்தைக் கட்டி வளர்க்கவும், தமிழ் பேசும் மக்களிடையே சுதந்திர உணர்வையும் தியாக மனப்பான்மையையும் ஏற்படுத்தவும் துக்க நாள் கொண்டாட்டம் பெருமளவில் உதவியது.

தமிழ்பேசும் மக்கள் நாய்கள் போல நடுத்தெருவில் வைத்து நையப்புடைக்கப்பட்டனர் -- தமிழ் மகளிர் பலர் தங்கள் கற்பைப்பறிகொடுத்தனர் -தமிழ் மக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன -யாருமற்ற அனாதைகளாக தமிழ் பேசும் மக்கள் அல்லல் பட்டனர்—அன்றைய ஆட்சியின் கீழ்.

எனவேதான் அன்று சிங்கள மக்கள் சுதந்திர தினத்தை கோலாகலமாகக் கொண்டாடிய போதெல்லாம் தமிழ்ப்பிரதேசங்களில் வான்முட்ட கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. துக்கம் கொண்டாடினர தமிழ் பேசும் மக்கள்.

ஆனால் 1965-ம் ஆண்டு தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமான தமிழரசுக்கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையே தமிழ் பேசும் மக்களின் முக்கிய பிரச்சினைகளில் ஓர் தற்காலிக உடன்பாடு ஏற்பட்டு தேசிய அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 3 ஆண்டுகளாக சுதந்திரதினத்தை தமிழ் பேசும் மக்கள் பகிஷ்கரிப்பதையும் தற்காலிகமாக நிறுத்திவைத்திருந்தனர்.

அரசாங்கத்துடன் ஒரு சமரச உடன்படிக்கை ஏற்பட்டிருக்கும் நேரத்தில் அதைக் குழப்பிவிடக்கூடிய முறையில் நடந்து கொள்வது அரசியற்பண்பாகாது என்ற காரணத்தால், சுதந்திரதினத்தை துக்கநாளாக கொண்டாடுவதை தமிழ் பேசும் மக்கள் நிறுத்தி வைத்திருந்தது முற்றிலும் சரியான செயலேயாகும்.

ஆனால் இன்று தமிழரசாருடன் செய்துகொண்ட உடன்படிக்கையை ஆட்சியாளர்கள் மீறிவிட்டனர். இதன்காரணமாக தமிழரசுக்கட்சியும் அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிட்டது.

தமிழ் பேசும் மக்கள் இந்த அரசாங்கத்திடமிருந்து ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பிரதேச சபை மசோதாவும் பிரேதப் பெட்டிக்குள் போடப்பட்டுவிட்டது. தனிச் சிங்களத்தை மறைமுகமாக தமிழ்ப் பிரதேசங்களில் திணிக்கும் முயற்சிகளும் அதிக அளவில் ஆரம்பமாகிவிட்டன. தமிழ் பேசும் மக்களுக்கு பாரபட்சம் காட்டமாட்டோம் என்று கூறிக்கொண்டே ஒவ்வொரு பிரச்சினையிலும் பாரபட்சம் காட்டிவருகிறது இன்றைய ஆட்சி.

ஆகவே இவ்வாண்டு பெப்ரவரி 4ந் திகதி சுதந்திர தினத்தன்று தமிழ்பேசும் மக்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற கேள்வி இன்றைய அரசியற் சூழ்நிலையில் மறுபடியும் எழுந்துள்ளது.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் நிலையை அலசி ஆராய்ந்து அவர்களை மீண்டும் விடுதலைப் பாதையில் அழைத்துச் செல்லும் திட்டங்களை வகுப்பதற்கு தமிழரசுக்கட்சியின் மாநில மாநாடு சித்திரை மாதம் யாழ்ப்பாணத்தில் கூட விருக்கிறது. எனவே அதற்கிடையில் அவசரப்பட்டு தமிழரசுத் தலைவர்களின் அனுமதியின்றி கறுப்புக்கொடி ஏற்றுதல், ஆர்ப்பாட்டம் நடத்துதல் போன்ற தீவிர நடவடிக்கைகளில் தமிழ் வாலிபர்கள் ஈடுபட்டால் அது தலையிருக்க வாலாடுதல் போன்ற செயலாகிவிடும்.

அதே வேளையில் சுதந்திரதினக்கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளாது தமிழ்பேசும் மக்கள் முற்றாகப் பகிஷ்கரிக்கலாம் — பகிஷ்கரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

பெப்ரவரி 4ம் திகதி சிங்கள மக்கள் தாங்கள் பெற்ற சுதந்திரத்தை கொண்டாடிக் குதூகலிக்கும் அதே வேளையில், ஆளப்படும் நிலை அகற்றி, தம்மைத்தாமே ஆளக்கூடிய ஓர் ஆட்சி அமைப்பைக் காண்பதற்குத் தொடர்ந்து போராட தமிழ் பேசும் மக்கள் உறுதியெடுத்துக் கொள்வார்களாக!

# தென்னிலங்கை தமிழ் மாணவர்களுக்கு சிங்களத்தை பாடமொழியாக்க மறைமுக சூழ்ச்சியா?

## தமிழ் போதனமொழியாகக்கொண்ட 4 கனிட்ட பல்கலைக் கழகங்கள் தமிழ்பேசும் மக்களுக்கு அவசியம்!

அரசாங்கம் ஐந்து கனிட்ட பல்கலைக்கழகங்களை தெகிவளை, கண்டி, குளியாப்பிட்டி காலி, பலாலி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கவிருக்கிறது. குளியாப்பிட்டியிலமையும் கனிட்ட பல்கலைக் கழகத்தை இம் மாதம் 2 ம் திகதி பிரதமர் முறைப்படி ஆரம்பித்து வைக்கிறார்.

இந்த ஐந்து கனிட்ட பல்கலைக் கழகங்களிலும், பலாலி கனிட்ட பல்கலைக் கழகத்தில் மட்டும் தான் தமிழ் போதனமொழியாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஏனைய 4 இடங்களிலும், சிங்களம் மட்டுமே போதனமொழியாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பலாலியில் மட்டுமே தமிழைப் போதனமொழியாக அனுமதித்திருப்பது தென்னிலங்கையில் வாழும் இலட்சக் கணக்கான தமிழ் மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தமிழைப் போதனமொழியாகக் கொண்டு கனிட்டபல்கலைக் பழகத்தில் பயில விரும்பினால், வடக்கு நோக்கிப்போ; இல்லாவிட்டால் பேசாமல் சிங்களத்தையே போதனமொழியாக ஏற்றுக் கொள்; என்று தென்னிலங்கையிலும்; கொழும்பிலும் வாழும் தமிழ் வாலிபர்களிடம் கூறுகிறது டட்லி அரசாங்கம். இது மறைமுகமாகத் தமிழ் மக்களிடம் சிங்களத்தைத் திணிக்கும் திட்டங்களில் ஒன்று என்பதே நமது கருத்தாகும்.

மாத்தறையிலோ, கண்டியிலோ, கொழும்பிலோ இருக்கும் தமிழ் இளைஞனுக்கு தமிழிலே கல்விகற்கும் உரிமை கிடையாதா? அப்படித் தமிழிலே கல்வி கற்க விரும்பினால் அவன் பலாலி நோக்கி ஓடவேண்டியதுதானா? இதுதான் தமிழ் மக்களுக்கு இன்றைய அரசாங்கம் காட்டும் நீதி நியாயமா?

ஒரு தமிழ் பிரஜை இலங்கையின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் அவன் தமிழ் மொழி மூலம் கல்வி கற்பதற்கு தமிழ் மொழிச் சட்டவிதிகள் மூலம் பூரண உரிமை யளித்துள்ள அரசாங்கம், அந்த உரிமையை நாடு முழுவதுமுள்ள தமிழ் மக்கள் அனுபவிப்பதற்கும் வசதி செய்து தர வேண்டாமா?

கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் நிலையென்ன? அங்கும் ஓர் கனிட்ட பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டும் என்று கிழக்குமாகாண எம். பிக்களும், தமிழரசுக் கட்சியினரும் பல காலமாக வாதாடி வருகின்றனர். அக்கோரிக்கையை ஏன் அரசாங்கம் இன்னும் நிறைவேற்றிவைக்கவில்லை? கல்வித்துறையிலும் ஏனைய துறைகளிலும் பின் தங்கியிருக்கும் மீன்பாடும் தேனாட்டு மக்களுக்கு கனிட்ட பல்கலைக் கழகப் பிரச்சினையிலும் ஏமாற்றம் தானா?

இந்த நாட்டிலே, பலாலி கனிட்ட பல்கலைக் கழகத்தைத் தவிர மேலும் தமிழைப் போதனமொழியாகக் கொண்ட 3 கனிட்ட பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டும் என்பதே நமது கருத்தாகும். இது அத்தியாவசியமானது:

1. பலாலியில் நிறுவப்படவிருக்கும் தமிழைப் போதன மொழியாகக் கொண்ட கனிட்ட பல்கலைக் கழகம் வட மாகாணத் தமிழ் வாலிபர்களுக்கு முழு அளவில் பயன்பட வேண்டும்.

2. கிழக்கு மாகாணத்தில் உடனடியாக தமிழை போதனமொழியாகக் கொண்ட மற்றோர் கனிட்ட பல்கலைக் கழகம் நிறுவப்பட்டாக வேண்டும். இது அவசரமும் அவசியமுமானது. இல்லாவிட்டால், கிழக்கு மாகாணமக்களுக்கு இந்த அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாகவே கருதப்படும்.

3. தெகிவளை கனிட்ட பல்கலைக் கழகத்தில் சிங்களத்துடன் தமிழும் போதனமொழியாக்கப்பட வேண்டும். இப்படிச் செய்வதால் மட்டுமே கொழும்பு தெற்கு பகுதியில் வசிக்கும் தமிழ் மக்கள் சிரமமின்றி தாய்மொழி மூலம் தங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்க முடியும்.

4. அடுத்து, மலைநாட்டுப் பகுதியில்-கண்டியில் நிறுவப்பட விருக்கும் கனிட்ட பல்கலைக் கழகத்திலும் சிங்களத்துடன் தமிழும் போதனமொழியாக்கப்பட வேண்டும். மலையகத்தமிழ் வாலிபர்கள் தாய்மொழி மூலம் சிரமமின்றி கனிட்ட பல்கலைக் கழகக் கல்வி பெற இது மிகவும் அவசியம்.

எனவே, மேலே குறிப்பிட்டபடி தெகிவளை, கண்டி ஆகிய இடங்களில் நிறுவப்பட விருககும் கனிட்ட பல்கலைக் கழகங்களில் சிங்களத்துடன் தமிழும் போதனமொழியாக்கப்பட வேண்டுமென்றும் கிழக்கு மாகாணத்தில் தமிழைப் போதனமொழியாகக் கொண்ட கனிட்ட பல்கலைக் கழகம் ஒன்று தாமதமின்றி நிறுவப்பட வேண்டுமெனவும், தமிழ்க் கட்சிகளும், தமிழ் பேசும் மக்களும் பெரும் கிளர்ச்சியிலீடுபட வேண்டுமென்று அறைகூவி அழைக்கிறோம். 'குட்டக் குட்டக் குனிபவன் பேயன்' என்பதை தமிழ்த் தலைவர்கள் உணர்ந்து, மேலும் குட்டுப்பட்டுக் கொண்டிருக்காமல் உரிமைக் கிளர்ச்சியில் இறங்குவார்களாக!

---

### மத்திய வங்கியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழில் வெளியிடுவதற்கான எவ்வித முயற்சியும் இன்னும் நடைபெறவில்லையென்றும், சிங்கள, ஆங்கில வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது. முறைப்படி வங்கியின் ஆண்டறிக்கை மார்ச் 31-ந் திகதிக்கு முன்னர் வெளியிடப்பட்டாக வேண்டும்.

ஆண்டறிக்கை அச்சிடும் பொறுப்பு சிங்களவர்களால் நடத்தப்படும் ஓர் அச்சுக் கூடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ் ஆண்டறிக்கையை அச்சிடும் பொறுப்பை தமிழர்களால் நடத்தப்படும் அச்சுக்கூடமொன்றிடம் கையளித்திருந்தால் அழகாகவும், குறித்த நேரத்திலும் வேலை நடைபெற்று முடியுமென்றும், வங்கியிலுள்ள சிலர் தங்கள் 'கொமிஷனுக்காக' குறித்த அச்சுக்கூடத்தையே பிடித்துத் தொங்குவதாகவும் பேசப்படுகிறது.

வங்கி ஊழியர்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் விளக்கும் வங்கிக் கைநூலை, தமிழிலும் வெளியிடும்படி வங்கித் தமிழ் ஊழியர் சங்கமும், கிளிநொச்சி, கோப்பாய் பா. உ.க்களும் மத்தியவங்கியிடம் கோரி ஓர் ஆண்டு முடிந்தும், இதுவரை அந்நூலைத் தமிழில் வெளியிட எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம். மொழிபெயர்ப்பு வேலை கூட நடக்கவில்லையென்று தெரிகிறது.

வங்கிக் கைநூலைத் தமிழில் வெளியிடாததால், தமிழ் மொழிச் சட்டம் மீறப்படுகிறதே என்று வங்கித் தலைமைப்பீடத்திடம் தமிழ் ஊழியர்கள் சிலர் அண்மையில் தெரிவித்த போது, தலைமைப் பீடம் அவர்கள் மீது சீறிவிழுந்ததாம்.

#### சிங்களக் காசோலை

தனிச்சிங்களத்தில் காசோலைகளை வழங்குவதிலும்வங்கி ஊழியர் சேவைத் திணைக்களம் மும்முரமாக செயற்பட்டு வருகிறதாம். தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தாராளமாக தனிச் சிங்களக் காசோலைகளைத் திணிப்பதில் மத்திய வங்கி அபரிமித ஆவல் காட்டி வருவதாகத் தெரிகிறது.

இந்தியாவுக்கு செல்லும் யாத்திரீகர்கள் எடுத்துச் செலவதற்கு அனுமதிக்கும் பணத்தொகையிலும் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையே மத்திய வங்கி தொடர்ந்து பாரபட்சம் காட்டி வருகிறது. இந்துக்களுக்கு ரூபா 300-ம் பௌத்தர்களுக்கு, ரூபா 500-ம்இங்கிருந்து கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறது.

இப்பாரபட்சத்தை ஆட்சேபித்து அண்மையில் மூதவையில் திரு. மு. திருச்செல்வம் பேசியபோது அப்பாரபட்சம் நீக்கப்படும் என்று அரசாங்க சார்பில் தெரிவிக்கப்பட்டதாயினும், இன்றுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.



# எமது கோரிக்கைகள் செவிடன்காதில் ஊதிய சங்கொலிதானா?

[மட்டக்களப்பு மாவட்டத்தின் தேவைகள் எதுவும் நிறைவேற்றப்படாததையும், தொடர்ந்து அம்மாவட்டம் புறக்கணிக்கப்பட்டு வருவதையும் சுட்டிக்காட்டி பிரதமருக்கு மட்டுநகர் எம். பி. திரு. செ. இராசதுரை கடந்தவாரம் இறுக்கமான கடிதம் ஒன்று எழுதியிருந்தார். இக்கடிதம் முழுவதும் அப்படியே இங்கு இடம் பெறுகிறது.]

"மட்டக்களப்பு மாவட்டம் தொடர்ந்து எல்லா அரசாங்கங்களிலும் புறக்கணிக்கப்படுவதன் காரணம் என்ன? 1956 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மட்டக்களப்பு மாவட்ட மக்களின் அதி முக்கியமான தேவைகளையெல்லாம் எந்த அரசாங்கமும் கவனத்துக் கெடுத்துத் தீர்க்க முன்வரவில்லை. உலக நாடுகள் இலங்கையின் பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்காக வழங்கும் நிதிகளில் மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடி, விவசாய, பொது மக்களின் அதி முக்கிய தேவைகள் பாராமுகமாக விடப்படுவதேன்?

இலங்கையின் ஒரு பகுதியாக, மட்டக்களப்புப் பிரதேசத்தை அரசாங்கம் கவனியாமல் புறக்கணிப்பதேன்? மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்படவிருந்த தாதிமார் பயிற்சிக் கல்லூரியின் கதி என்னவாயிற்று? 1957 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி தாதிமார் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிப்பதற்கான நிதி, வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுக் கொண்டு வந்தும் இதுவரை அந்தக் கல்லூரியை ஆரம்பிக்க எந்த அரசாங்கமும் முன்வரவில்லை.

### கனிட்ட பல்கலைக் கழகம்

மட்டக்களப்பில் கனிட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்படும் என்று பல தடவைகள் அளிக்கப்பட்ட உறுதி மொழிகளை, அப்பொழுது ஆட்சியிலிருந்த அரசாங்கமும் இப்பொழுதுள்ள அரசாங்கமும் கொடுத்து வந்தும் இதுவரை அக் கல்லூரியினை ஆரம்பிப்பதில் ஏன் பாரபட்சம் காட்டப்படுகின்றது?

இந்த நாட்டில் கனிட்ட பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வந்த பொழுது கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் கல்வி

## இராசதுரை எம். பி. குமுறல்!

அமைச்சரவர்களைச் சந்தித்து கிழக்கு மாகாணத்தில் கனிட்ட பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டபொழுது அவர் ஒப்புதல் கொடுத்தும் இதுவரை மட்டக்களப்பில் அந்தக் கனிட்ட பல்கலைக் கழகம் அமைக்கப்படவில்லை.

### புகையிரத சேவை

மட்டக்களப்பு புகையிரதப் பாதையை தெற்கே அக்கரைப்பற்று வரை விஸ்தரிக்க வேண்டுமென்ற குரல் பாராளுமன்றத்தில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக ஒலிக்கிறது. காலத்துக்குக் காலம் செலவினங்களுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவதும் பின் அவை கவனிப் பாராற்றுப் போவதும் ஏன்?

மட்டக்களப்புக்கு ஆரம்பிக்கப்படவிருந்த கடுகதி புகையிரத சேவை இன்னமும் பின்போடப்பட்டு வருவதற்கான காரணம் என்ன?

வெளிநாட்டு மீன்பிடி நிபுணர்களால் மட்டக்களப்புப் பகுதியில் சிபார்சு செய்யப்பட்ட மீன்பிடித் துறைமுகங்களில் இதுவரை ஒன்றுதானும் ஆரம்பிக்கபடாததேன?

சீனு—இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் மட்டக்களப்புப் பகுதியில் ஆரம்பிக்கப்படவிருந்த மின்தறி நிலையம் கைவிடப்பட்டதேன்?

மட்டக்களப்பில் நெசவுப் பயிற்சிக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று கொடுக்கப்பட்ட உத்தரவாதம் ஏன் கைவிடப்பட்டது?

### உன்னிச்சைத் திட்டம்

கல்லோயா இடது புறவாய்க்காலை உன்னிச்சைக் குளத்தோடு இணைக்கும் உத்தேசத் திட்டம் ஏன் கைவிடப்பட்டது? இதருல் 30,000 க்கும் அதிகமான ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு வாவியினால் பிரிக்கப்பட்டுள்ள கிழக்குப் பகுதியையும் மேற்குப்பகுதியையும் இணைத்து விவசாயிகளுக்கு நன்மையளிப்பதற்கு மண்முனை, வவுனதீவு துறைகளில் அமைக்கப்படவிருந்த பால நிர்மாண வேலைகள் பின்போடப்பட்டு இருப்பதேன்?

கிழக்கில் மிகப் பெரிய மகிழவெட்டுவான் நீர்த்தேக்க வேலைகள் முற்றாகக் கைவிடப்பட்டிருப்பது ஏன்?

முந்திரிச் செய்கைக்கென போதிய அளவு உதவி அரசாங்கம் வழங்காமல் இருப்பதேன்?

(9-ம் பக்கம் பார்க்க)

# இலக்கிய உலகு

-"வேதாளம்"-

### 'முதுகுசொரியும்' விமரிசகர்கள்!

இறுகதைத் தொகுதிகள், கவிதைத் தொகுதிகள் வெளியிடுவதில் இன்று நம் எழுத்தாளர்கள் அளவுகடந்த ஆர்வம் காட்டிவருகின்றனர். இது நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டிய தொன்றுதான். ஒழுங்காக பேனைபிடித்து எழுதத் தெரியாத குஞ்சு எழுத்தாளர்கள்கூட 'புத்தகம்' போட்டு விடுவதில் முனைந்து நிற்கிறார்கள். எப்படியோ இத்தகைய ஆர்வம் நம்மவர்களிடையே ஏற்பட்டுவிட்டது. நிச்சயமாக ஈழத்து இலக்கிய உலகில் இது ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதென்பதில் யாருக்கும் ஐயமில்லை.

புத்தகம் வெளியிட்ட கையுடன், அப்புத்தகம் பற்றிய விமர்சனக் கருத்தரங்கு ஒன்றை நடத்துவதும் இப்போது ஒரு 'பாஷனு'யிருக்கிறது. அர்த்த புஷ்டியோடுதான் 'பாஷன்' என்று குறிப்பிட்டேன். ஏனெனில் பெரும்பாலும் இத்தகைய விமரிசனக் கருத்தரங்கு எல்லாம் 'முதுகு சொரியும்' வேலையாகத்தான் இருக்கின்றன.

விமரிசனம் என்பது ஒரேயடியாகக் கண்டிப்பதோ 'நக்கல்' மொழி புகல்வதோ அல்ல; ஆனால் அதே நேரத்தில் ஒரேயடியாக தகுதி மீறிப் புகழ்ந்து உச்சாணிக் கொப்பில் ஏற்றி வைப்பதும் விமரிசனமல்ல; நிறைவை புகழ வேண்டும். குறையை யாா் மனமும் நோகாமல் எடுத்துக்காட்ட வேண்டும். அதுதான் விமரிசனம்.

இப்பொழுது நாட்டில் ஆங்காங்கு அடிக்கடி நடத்தப் பெறும் இலக்கிய விமர்சனங்களெல்லாம் முதுகு சொரியும்' விமர்சனர்களாகவேயிருக்கின்றன. அனேகமாக முற்போக்கு எழுத்தாளர் என்று கூறப்படுவோரின் நூல்களைப் பற்றி நடக்கும் விமரிசன அரங்குகள் இப்படியேதான் இருக்கின்றன. முற்போக்கு எழுத்தாளர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் முதுகு சொரியாவிட்டால் அவர்களை வேறு யார்தான் கவனிக்கப் போகிறார்கள் என்கிறீர்களா? அதுவும் சரிதான்!

★

### வேதாளம் யார்?

யார் இந்த வேதாளம்? என்ற கேள்வி எழுந்தான வட்டாரங்களில் பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளதாம். அவராக இருக்குமா இவராக இருக்குமா என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொள்ளுகிறார்களாம்.

செம்பியன் செல்வன் தான் என்கிறாராம் ஒருவர். இல்லை இது செங்கை ஆழியான்தான் என்கிறாராம் மற்றொருவர். இவர்கள் இருவருமே இல்லை. இது வ. அ. இராசரத்தினமே தான் என்கிறாராம் பிறிதொருவர்.

இப்படி எழுத்தாளவட்டத்தில் எப்படிச்சர்ச்சைகள் எழுந்தாலும் வேதாளம், தனக்குச் சரியென்று பட்ட கருத்துக்களையும், இலக்கிய உலகில் நடக்கும் சுற்றுமாற்றுக்களையும் தில்லு முல்லுகளையும் தயங்காமல் புட்டுக்காட்டிக் கொண்டேயிருக்கும்.

★

எழுத்துலகிலிருந்து மெல்ல மெல்ல ஒதுங்கி 'அறிதுயில்' கொண்டிருந்த பழைய எழுத்தாளர்கள் சிலரை வேதாளத்தின்' கிண்டல்' மீண்டும் எழுத்துலகுக்கு இழுத்து வந்திருக்கிறது. அதைக்கான வேதாளம் மகிழ்ச்சியடைகிறது.

நீண்டகாலமாக பேனாவையே தொடாமலிருந்த 'சிற்பி' மறுபடியும் பேனாவைக் கையிலெடுத்துள்ளார். அதன் பயனாக அவரது எழுத்தோவியங்கள் சில கடந்த இரு வாரங்களாக வாசகர்களுக்கு கிடைத்து வருகின்றன. இதே போல மற்றவர்களும் துயிலிலிருந்து விழிப்பார்கள் என்று வேதாளம் எதிர்பார்க்கிறது.

★

திரு. நா. க. தங்கரத்தினத்தின் (நகுலன்) சிறுகதைத் தொகுதியான "இப்படி எத்தனை நாட்கள்?" என்ற நூல் கடந்த பொங்கலன்று வெளிவந்துள்ளது. கடந்த 65ம் ஆண்டு தொடக்கம் 68ம் ஆண்டு வரையுமுள்ள இடைக்காலத்தில் ஆசிரியரால் எழுதப்பட்ட 11 கதைகளை இத்தொகுதி தன்னகத்தே கொண்டுள்ளது.

இத்தொகுதியில் இடம் பெற்ற முதலாவது சிறுகதை 'வாழ்வு மலருமா?' தென்னிந்திய வாசகர் வட்டப் பிரசுரமான 'அக்கரை இலக்கியம்' என்னும் தொகுப்பு நூலில் மறுபிரசுரம் செய்யத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14 டாம் வீதி, கொழும்பு-12.

# 'சமஷ்டியே எங்கள் கொள்

# என்றால் அதற்கும் நாங்கள்

## தமிழ்மக்களுடைய வாழ்வைப் பாழாக்க கொஞ்சமும் அனுமதிக்கமாட்டோம்!

தமிழினத்தினுடையசார்பில் பல்கலைக் கழகங்களைப் பற்றி — விசேடமாகக் கொழும்பிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகம் செய்த சில குறைகளைப் பற்றி— முன்யோசனையில்லாத திட்டத்தால் ஏறக்குறையபதினெருமாணவர்கள் இன்று பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதைப் பற்றி நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

கொழும்பு பல்கலைக் கழகத்திலே இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகக் கற்பித்தார்கள்: ஓர் ஆண்டு கற்பிக்கப் பட்டது. அதன் பின்னர் அந்த இந்து சமய பாடத்தை எடுத்தபதினெரு மாணவர்களை இரண்டாவது ஆண்டுக் கல்விக்காக பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பினார்கள்.

இப்படி அனுப்பிய பொழுது மாணவர்களின் பெற்றோர்கள் அங்கே இந்து கலாசாரத்தைப் பயிலுவதற்கான வசதிகள் இருக்கின்றனவா என்று கேட்டார்கள். உயர்கல்விச் சபையின் தலைவர் டாக்டர் மலலசேகரா இரண்டு மாணவர்களின் பெற்றோர்களுக்கு எழுதிய கடிதங்கள் என்னிடமுண்டு. அவர் 'அங்கே உங்களுக்கு வேண்டிய ஒழுங்குகள் செய்து தரப்படும்' என்று எழுத்தில் குறித்திருந்தார்.

பல கிழமைகள் சென்றன மாதங்கள் கடந்தன. எந்த விதமான ஒழுங்கும் செய்யப்படவில்லை. அபலைகளான, ஆதரவு தருவாரற்ற அந்த மாணவர்கள், பலரிடம் போனார்கள். கடைசியாக என்னிடமும் வந்தார்கள். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நாவலர் விழாவில் கலந்து கொள்ள நான் சென்றிருந்த பொழுது அந்தப் பல்கலைக் கழக மாணவர்கள் என்னிடம் முறையிட்டார்கள்.

### மலலசேகரா பதில்

அப்பொழுது நான் உயர் கல்விச் சபையின் தலைவர் டாக்டர் மலலசேகரா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். "இந்த மாணவர்களுடைய பெற்றோர்களுக்கு, இந்து நாகரிகம் ஒரு பாடமாகப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கற்பிக்கப்படும் என்று நீங்கள் உறுதி கொடுத்திருக்கிறீர்கள். அந்த உறுதிமொழியை நிறைவேற்ற எவ்விதமான நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? நான் இவ்விடயத்தைப் பாராளுமன்றத்திலே சுட்டிக்காட்ட வேண்டிய நிலையை உண்டாக்காதீர்கள்' என்று அவருக்கு எழுதினேன். அப்பொழுது அவர், இது நிகழ்ந்தது கொழும்புப் பல்கலைக் கழகத்திலுள்ள சிலரின் போதிய ஆராய்ச்சியில்லாத காரணத்தால்—எனக் குறிப்பிட்டு எனக்குப் பதில் அனுப்பியிருந்தார்.

"போதிய ஆராய்ச்சியில்லாமல், போதிய திட்டமில்லாமல் தொடங்கி விட்டார்கள்: இதனால் மாணவர்கள் இடர்ப் படுகிறார்கள் என்பதை அறிவோம். அவர்களுக்கு வேண்டிய வகுப்பை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நிறுவ எண்ணுகிறோம். இந்து நாகரிகத்தைக் கற்பிக்காவிட்டாலும் கூட திராவிட நாகரிகத்தையோ அல்லது சைவ சித்தாந்தத் தத்துவத்தையோ கற்பிக்க பேராதனைப் பல்கலைக் கழகத்திலே ஒழுங்குகள் செய்வோம்' என்று எழுதியிருந்தார்.

### சுந்தரர் பேட்டி

இது அரசியல் வாதிகளுடைய பிரச்சினை அல்ல. இந்தப் பிரச்சினை சம்பந்தமாக பல சைவசமய சங்கங்கள் உயர்கல்விச் சபையோடும் பல்கலைக் கழக துணை வேந்தர்களோடும் பேச்சுக்கள்நடத்திக் கொண்டிருக்கின்றன. கடைசியாக சைவ அனுட்டான சபைத் தலைவரும, முன்னைநாள் வவுனியா பாராளுமன்ற அங்கத்தவருமாகிய திருவாளர் சுந்தரலிங்கம் அவர்களும் உயர்கல்விச் சபைத் தலைவரைப் பேட்டி கண்டு பேச்சு வார்த்தைகள் நடாத்தியதன் பயனாக தினகரன் பத்திரிகையின் தை மாதம் 11 ஆம் தேதி இதழிலே "இந்து கலாசார பாடம் போதிக்கப்படும்— பேராதனைப் பல்கலைக் கழகத்திலே" என்ற செய்தியைக் கண்டோம். இவ்வாறு மாணவர்கள் பற்பல விதமாக நம்பிக்கையூட்டப்பட்டார்கள். கடைசியாக அவர்கள் நட்டாற்றிலே விடப்பட்ட நிலை தான் இன்று நாம் காணும் நிலை. அந்தப் பத்திரிகையில் வெளியான செய்தியைப் பாருங்கள்:

### தினகரன் செய்தி

'பேராதனை பல்கலைக் கழகத்தில் இந்து கலாசாரம் படிக்க முடியாது பாதிக்கப்பட்டுள்ள 11 மாணவர்களுக்கும் பேராதனைப் பல்கலைக் கழகத்திலேயே இந்து காலாசாரம் பயில நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய உயர் கல்விச் சபைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா தம்மை இது விஷயமாகச் சந்தித்த, தூது கோஷ்டியினரிடம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இந்து மாணவர்கள் நிலை குறித்து முன்னால் வவுனியா எம். பி. திரு. ஸி. சுந்தரலிங்கமும் சைவ அனுட்டான பாதுகாப்புச் சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் ஜே. பி. யும் புதன்கிழமை உயர் கல்விச் சபைத்தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகராவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நீண்டநேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது முதலில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இந்து கலாசாரம் பயிலமுடியாதமாணவர்களைக் கொழும்பு பல்கலைக் கழகத்தில் சேர்க்க ஏற்பாடு செய்வதாக டாக்டர் மலலசேகரா தெரிவித்ததாகவும், இதனை திரு. ஸி சுந்தரலிங்கம் ஆட்சேபித்து பேராதனைப் பலகலைக் கழகத்திலுள்ள நால்நிலைய வசதி கொழும்பில் இல்லை என்பதனைச் சுட்டிக் காட்டியதுடன் இந்து கலாசாரம பயிற்றக் கூடியவர்கள்பேராதனையில் இருக்கிறார்கள் எனபதையும் சுட்டிக் காட்டினார்.

### தொடர்பு கொண்டேன்

இந்தச் செய்தி, பேராசிரியர் மலலசேகரா எனக்கு அறிவித்த செய்திக்கு முரண்பட்டிருந்தபடியால் அன்று காலையிலேயே நான் தொலைபேசி மூலம் அவருடன் தொடர்பு கொண்டேன். அப்போது அவர் 'இது பொருத்தமற்ற செய்தி, நாங்கள் கற்பிக்க முடியாத நிலையில்தான் இருக்கிறோம்' என்று சொன்னார். அதன் பின்னரும் நான், 'நீங்கள் திராவிட நாகரிகத்தையோ சைவ சித்தாந்தத்தையோ ஒரு பாடமாகப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கற்பிக்கலாம என்று வாக்குத் தந்தீர்கள்; அதை ஏன் செய்யக் கூடாது?' என்று கேட்டேன். அதைச் செய்ய முடியாதென்றால் இந்தப் பதினொரு மாணவர்களுடைய எதிர்காலத்தை இப்படியாகப் பாழாக்கிய கொழும்புப் பல்கலைக் கழக உத்தியோகத்தர்கள் மீது, அல்லது ஆசிரியர்கள் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாதென்றும் நான் அவரை கேட்டேன். அதற்கு அவர், 'நாங்கள் பதினொரு மாணவரையும் சமாதானப்படுத்தி வேறு பாடம் எடுக்கச் செய்தோம்' என்று எழுதியிருந்தார். 'அவர்களைச் சமாதானப்படுத்தி ஒரு வருடமாகப் படித்த பாடத்தை விட்டு விட்டு இன்னொரு பாடத்தை எடுக்க நாம ஒழுங்கு செய்திருக்கிறோம்; இதற்குப் பலகலைக்கழகம முழுவதும் பொறுப்பான படியால் யாரைத் தண்டிப்பது?' என்று அவர் ஒரு கேள்விக்குறி போட்டு என்னைக் கேட்டிருந்தார்.

### தன்மானம் இருந்தால்...

நான் கூறுகிறேன், இப்பிரச்சினையில் உண்மையாக எல்லோருமே பிழை செய்திருந்தால், செனெற் கூட பிழை செய்திருந்தால், அவர்கள் தன்மானம் உள்ளவர்களாயிருந்தால், அவர்கள் மனிதப் பண்புக்கு மதிப்புக் கொடுப்பவர்களாக இருந்தால் தாங்களே அந்தப் பதவிகளை விட்டு விலகியிருக்க வேண்டும்.

தேசிய கல்விச் சபைக்கு இந்த விடயத்தில் உண்மையான அதிகாரம் இல்லாதிருந்தால், கண்டிக்க அதிகாரமில்லாதிருந்தால் அந்தக் கல்விச்சபை இனித் தாழும் வாழாது தன்னையே ஒழித்துக் கட்டியிருக்க வேண்டும். அன்றி, இந்த நாட்டில் அதிகாரத்தை வைத்திருக்கின்றவர்கள், இந்த நாட்டிலே அதற்குப் பொறுப்பாயிருக்கின்றவர்கள், சிறுபான்மையினராக, தமிழராகப் பிறந்த குற்றத்திற்காக இந்த மாணவர்களை நட்டாற்றிலே விடுவது எந்த விதத்திலும் நீதியாகாது.

இந்த மாணவர்கள் இன்று வேறு பாடங்களைப் படிக்கிறார்கள். இந்த மாணவர்களுடைய மன நிலையைச் செம்மையாக நாம எடுத்துக் கூறுவதற்கு இந்தஇடத்தைத் தவிர வேறு எந்த இடமும் இல்லை ஒரு பாராளுமன்ற ஆட்சி உள்ள நாட்டிலே பாராளுமன்றம் தான் இப்படியாக முறை தவறி, கடமையைச் செய்யாமல் இருக்கின்ற திட்டம் இல்லாமல் செயலாற்றும் எவரையும் எடுத்துக்காட்டி, தட்டி நியாயம் கேட்கக்கூடிய இடம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இது இந்தப் பதினொரு மாணவர்களுக்கும் ஏற்பட்டுள்ள ஒரு சாபக்கேடான நிலை.

நான் கூறும் விடயத்திற்கு கொழும்புப் பல்கலைக் கழகமும் தேசிய உயர்கல்விச் சபையும் பொறுப்பாகும். இதுபற்றிய பல விடயங்கள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.

ஏறக்குறைய ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் கொழும்புப் பல்கலைக் கழகத்திலே போதிய விசாரணையின்றிச் சேர்க்கப்பட்டார்கள். அவர்கள் படித்த பாடங்கள் கொழும்புப் பல்கலைக் கழகத்திலே கற்பிக்கக் கூடியனவாக இருக்குமா என்று முதலிலே ஆராயாமல் சேர்க்கப்பட்டார்கள்.

### கேலிக் கூத்து

உலகிலே எந்தப் பல்கலைக் கழகத்திலும் இப்படிப்பட்ட கேலிகூத்து நடப்பதில்லை. ஒரு மாணவர் தகுதியாக இல்லாவிட்டால் அந்த மாணவனைச் சோப்பது யார்? அதனை அலசிப் பாராமல் மாணவர்களைச் சேர்த்ததோடு மட்டுமின்றி, அவர்களுக்குத் தேசிய கல்விச்சபை பல நம்பிக்கைகளையும் ஊட்டியிருக்கிறது. அடிக்கடி கடிதங்களையும் எழுதியிருக்கிறது. 'நீஙகள் ஒரு பாடமா... இந்து சமயத்தை எடுக்கலாம' என்று கூறியிருக்கிறது. பின்னர், 'கொழுமபுப் பல்கலைக் கழகத்திலே அந்தப் பாடம் இல்லை: ஆதலால் உங்களை வெளியேறற வேண்டிய நிலையிருக்கிறது. ஆனால், ஒரு பாடத்தை நீங்கள் அடுத்த கல்விப் பொதுத்தராத... பரீட்சைக்கு எ... களைக் கொழும்... கழக...ல் ...போம்' என்று ... கல்விச்சபைத் ... பேராசிரியர் ... அந்த மாணவர்... வித்திருந்தார்.

ஆனால், நட... மெல்ல... மெல்ல... களுக்கு... அந்த... எடுக்க ...முடியா... அவர்கள்... பல்க... லிருந்தே விரட்... கள்.

### பேராதனை...

பேராதனைப்... கத்திலும் இ...

## பாராளுமன்றத்தில் கிளிநொச்சி எம். பீ. கர்ச்சனை!

## பல்கலைக் கழத்திலிருந்து 11 தமிழ் மாணவர்கள் விரட்டப்பட்டதற்கு யார் காரணம?

---

சென்னைக்கடிதம

# அண்ண...

# மதியா? நிதிய...

## பதில்காண வே...

## வந்துவி...

## இந்திப் பிரச்சினை...

### தமிழக மாணவர் இ...

நேருவுக்குப் பின் யார் என்ற கேள்வி முன்பு அகில இந்தியக் காங்கிரசை அலைக்கழித்து வந்தது போல அண்ணுவுக்குப் பின யார் என்ற கேள்வி இன்று தமிழ் நாட்டு மக்களை மனதில மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகெங்குமுள்ள தமிழர்கள உள்ளங்களிலும் கேட்கப்படுகிறது. தி. மு. க. தோழர்கள் மத்தியிலும் இதே கேள்விதான் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அண்ணுவுக்கு ஏற்பட்ட அபாயநிலை இன்று ஓரளவு நீங்கிவிட்டபோதிலும், முன்போல கடமை யாற்றுவதற்கு இனி அவரது உடல் நிலை இடம் கொடுக்க முடியாது என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை. அண்ணு பூரண ஓய்வெடுத்துக் கொண்டு மிகச் சிக்கலான பிரச்சினைகளில் மட்டும் கழகத்துக்கும், ஆட்சிக்கும் அப்போதைக்கப்போது ஆலோசனை கூறி வரவேண்டும் என்றே பலரும் கருதுகிறார்கள்.

அண்ணு தமிழகத்துக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் மிகபபல இருக்கின்றன. அதற்கு அவரது உடல் நிலை செமமையாக இருக்க வேண்டும. தமிழக மாணவர்களிடையே பொங்கும் இந்தி எதிர்ப்புணர்வையும், தமிழ் உணர்வையும் முறைப்ப...

...டுத்தி நெறிப்ப... திர தமிழ் நாட்... யெழுப்புவதற்கு... அண்ணுவைத் ... யார் இருக்கிறார்...

அண்ணுவுக்கு ... பயங்கரமான ... கள் செய்த புண்... நீக்கப்பட்டிருக்... நோய் மீண்டும் ... லிருக்கவும் இ... வழி.

ஆகவே, அண்... தாமதமின்றி த... யார் என்பதை ... விடவேண்டும். ... கழக மகாநாட்... புதிய தலைவரை... செய்ய வேண்டு...

தமக்குப் பின்... வது போகட்டு... இருந்துவிட... ஏனெனில் தி. ... தான், உலகெங்... ழர்களின் நம்பிக்... திரமாக இன்று ...

அண்ணுவுக்கு ... யில் இன்று தி... நெடுஞ்செழியன்... நிதி, மதியழகன் ... இருக்கிறார்கள். ... ஒரே ச...டாக ... கத்தை வழி ... அதுவேறுவிடய... கட்சித் தலைவ... சொல்வதற்கு ஒ... இருக்க முடியு... யார் அந்த இட...

# ர் கை; பிரிந்து போங்கள்

# ள் தயார்!

துத்தராதர (உயர்தர) சைக்கு எடுத்தால் உங் கொழும்புப் பல்கலைக் ல் வைத்திருப் ம்' என்று தேசிய உயர் ச்சபைத் தலைவர் ாசிரியர் மல்லசேகர மாணவர்களுக்கு அறி திருந்தார்.

ல், நடந்தது என்ன? ல மெல்லமாக அவர் கு அந்தப் பாடத்தை க முடியாமல் செய்து கள் பல்கலைக் கழகத்தி தே விரட்டப்பட்டார்

பேராதனையில்...

ராதனைப் பல்கலைக் கழ லும் இப்படி ஒரு பிரச்சினை எழுந்தது. தகுதியில்லாத மாணவர்கள் அங்கு சேர்க்கப்பட்டார்கள். தகுதியில்லாதவர்கள் என்று நான் கூறும்பொழுது இப்போதுள்ள விதிகளுக்கமைய வேண்டிய பாடங்களை எடுத்து, அவற்றில் வேண்டிய தேர்வு பெற்று சிற்சில தொகுதிப் பாடங்களில் தேர்ச்சியிருந்தால்தான் பல்கலைக் கழகங்களில் சேர முடியும்; ஆனால் அப்படிப்பட்ட நிபந்தனைகளைக் கவனிக்காமல் சேர்க்கப்பட்டு விட்ட மாணவர்கள் ஆசிரியர்களைக் குறை சொன்னார்கள். ஆசிரியர்களோ தேசிய உயர் கல்விச் சபையைக் குறை கூறினார்கள்.

அங்கு சேர்க்கப்பட்ட சுமார் நாற்பது, ஐம்பது மாணவர்களை வீட்டிற்குத் திருப்பி அனுப்புவதா என்ற ஒரு சிக்கலான நிலை ஏற்பட்ட சமயத்தில் பேராதனை பல்கலைக் கழக செனெற் அந்தச் சிக்கலை ஆராய்ந்து மாணவர்களுக்குச் சாதகமான முறையில் அதைத் தீர்த்து வைத்தது. மாணவர்களது நன்மையைக்கருதி அவர்கள் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் கல்வி பயில அது அனுமதியளித்தது.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் நடந்தது என்ன? தமிழனாகப் பிறந்தவனுக்கு இது மிகவும் விசனமான, கவலைக்குரிய ஒரு விடயமாகும் இப்படியாக ஓர் அநீதிகள் மக்களுக்கு நடந்திருக்குமாக இருந்தால் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கும். அவ்வளவு உணர்ச்சிகள் மக்களுக்கு இருக்கின்றது.

### யார் பொறுப்பு

படிப்படியாக தேசிய உயர் கல்விச்சபைகொடுத்த வாக்குறுதிகள் மீறப்பட்டு விட்டன. கௌரவ அமைச்சர் அவர்கள் அகில இந்து மாமன்றத்திற்குக்கொடுத்த வாக்குறுதியும் மீறப்பட்டு விட்டது. இப்பொழுது மாணவர்கள் வீட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டு விட்டார்கள்.

இதற்கு யார் பொறுப்பு என்று கேட்க விரும்புகிறேன்? இந்த மாணவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டியது தேசிய உயர் கல்விச் சபையின் பொறுப்பாகும். உண்மையில் இந்த உயர் கல்விச் சபைக்கு இன்று என்ன நடந்து விட்டது? ஒரு நீதியான காரியத்தைச் செய் என்று பல்கலைக் கழக செனேற்றுக்குச் சொல்ல ஒருவேளை தேசிய உயர் கல்விச் சபைக்கு அதிகாரம் இல்லாமல் இருந்தாலும் இருக்கலாம் ஆனால் பேராதனை பல்கலைக் கழகத்தில் பின்பற்றப்பட்ட முறையைக் கொழும்பு பல்கலைக் கழகம் செனெற் ஏன் பின்பற்ற முடியாதென்று நான் கேட்க விரும்புகிறேன்.



அமைச்சர் அவர்களுக்கு இது விடயத்தில் போதிய அதிகாரம் இல்லாமல் இருந்தால் அவர் தமக்கு வேண்டிய அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஓர் இனத்திற்காக ஒரு குறிப்பிட்ட மக்களுக்காக ஒரு நீதியைச் செய்வதற்கு அமைச்சர் அவர்களுக்குப்

(9-ம் பக்கம் பார்க்க)

# ணாவுக்குப் பின் யார்?

## தியா? நெடுஞ்செழியனா?

## வேண்டிய நேரம் வந்துவிட்டது!

## சினையில் டில்லிக்கு

## வர் இறுதி எச்சரிக்கை!

நெறிப்படுத்தி, சுதந் தமிழ் நாட்டைக் கட்டி ப்புவதற்கு இன்று னாவைத் தவிர வேறு இருக்கிறார்கள்.?

ண்ணாவுக்கு ஏற்பட்ட கரமான நோய் தமிழர் செய்த புண்ணியத்தால் ப்பட்டிருக்கிறது. அந் மீண்டும் ஏற்படாம க்கவும் இது ஒன்றே

கவே, அண்ணா இனியும் தமின்றி தமது வாரிசு என்பதை அறிவித்து வேண்டும். அன்றேல், மகாநாட்டைக் கூட்டி தலைவரை தெரிவு ய வேண்டும்.

மக்குப் பின் எப்படியா போகட்டும் என்று ந்து விடக் கூடாது. னில் தி. மு. கழகம் , உலகெங்குமுள்ள தமி ளின் நம்பிக்கை நட்சத் ாக இன்று திகழுகிறது.

ண்ணாவுக்கு அடுத்த நிலை இன்று திருவாளர்கள் டுஞ்செழியன், கருணா மதியழகன் ஆகியோர் க்கிறார்கள். இம் மூவரும் டாக இயங்கிக் கழ தை வழி நடத்தலாம், வேறுவிடயம். ஆனால், த் தலைவர் என்று ல்வதற்கு ஒருவர்தானே க்க முடியும்? மூவரில் அந்த இடத்துக்கு வரப் போகிறார்கள் என்பதே இன்றைய கேள்வி!

ஃ ஃ

தமிழ் நாட்டில் மீண்டும் வேகத்துடன் இந்தி எதிர்ப்பு போராட்டம் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. சும்மாயிருந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி என்பது போல தமிழக வானொலியில் ஆங்கிலச் செய்தியறிக்கை வாசிக்கும் நேரத்தை மாற்றி, அந்நேரத்தில் இந்திச் செய்தி வாசிப்பது என்று டெல்லி செய்த முடிவுதான், தமிழ் நாட்டு மாணவர்களை மீண்டும் இந்திப் போராட்டத்தில் குதிக்க முடிவு செய்யும்படி தூண்டிவிட்டது என்று கூறினால் அது மிகையல்ல.

திருச்சி தேவர் மன்றத்தில் கூடிய தமிழ்நாடு மாணவர்களின் இந்தி எதிர்ப்பு மாநாடு இந்தியா, இந்தியாவா வேண்டும் என்பதை உடனே முடிவு செய்யும்படி டெல்லி அரசாங்கத்துக்கு அறைகூவல் விடுத்திருக்கிறது. அரசியல் சட்டத்திலிருந்து ஆட்சிமொழி பற்றிய 17வது விதியை நீக்காவிடில், இந்திய யூனியனிலிருந்து தமிழ்நாடு விடுதலைக்கான இயக்கத்தை ஆரம்பிப்பதற்கான கட்டாயம் மாணவர் சமூகத்துக்கு ஏற்பட்டுவிடும் என்று மாநாடு மத்திய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுதந்திரத் தமிழ் நாடு அமைப்பதற்கான போராட்டத்தை தொடக்குவதற்கு பெப்ரவரி 10 வரை அவகாசம் கொடுப்பதென்றும் மாணவர் மாநாடு தீர்மானித்திருக்கிறது.

இம்மாநாட்டில் சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்கள் திட்டமிட்டுள்ளபடி போராட்டத்தை வின் ஒரேயொரு உத்தியோக மொழியாக இருக்க வேண்டுமெனவும், அதுவே சட்ட மொழியாகவும், நீதிமன்றஉயர்நீதிமன்ற மொழியாகவும், நீடிக்க வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அரசியல் சட்டத்தை திருத்தும்படியும் மாநாடு இந்திய அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

தங்களது கோரிக்கைகள் ஆறு மாதங்களுக்குள் நிறைவேற்றப்படாவிட்டால், உடனடியாக நேரடி நடவடிக்கையிலிறங்கப் போவதாகவும் மாநாட்டில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தியைத் திணிக்கும் தனது போக்கை இந்திய மத்திய ஆட்சி கைவிடாவிட்டால், இந்தியா பிளவுண்டு போவது நிச்சயம் என ராஜாஜியும் கடந்த வாரம் பிரதமர் இந்திராவை எச்சரித்திருக்கிறார்.

ஆக, இந்தியை திணிப்பதில், மத்திய ஆட்சி தொடர்ந்து பிடிவாதமாக இருக்குமானால், உள்நாட்டுப் பூசல்கள் அதிகரிப்பதையும் நாட்டில் பிரிவினை சக்திகள் வளர்ச்சியடைவதையும் தடுத்து நிறுத்த எந்தச் சக்தியாலும் முடியாது போகலாம்.

ஃ

ஒரேயொருவர் மட்டும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார். அவர்தான் பெரியார் ஈ. வே. ரா.

திருச்சியில் ஓர் கூட்டத்தில் பேசிய பெரியார் திருவள்ளுவர் 2000 ஆண்டு பிறந்ததின விழாவை தி. மு. க. அரசு கொண்டாடவேண்டிய அவசியம் இல்லையென்றும், உலக நாடுகள் துரிதமாகப் பல துறைகளில் முன்னேறி வரும்போது, நாம் வள்ளுவருக்கு விழாவெடுப்பது "காட்டுமிராண்டிகள்" யுகத்தை நோக்கி பின்னோக்கிச் செல்வதைப் போன்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஃ

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குள் இருந்துவந்த உட்பூசல் நாகர் கோயில் காமராசர் வெற்றிக்குப்பின் அதிகரித்துவிட்டிருக்கிறது; திரு. காமராசரின் வெற்றி, காமராசர் கோஷ்டியினரின் கையைப் பலப்படுத்தியிருக்கிறதென்றும், திரு. சி. சுப்பிரமணியத்துக்கு ஆதரவான கோஷ்டியை இப்பொழுது கேலியும் கிண்டலும் செய்துவருவதாகவும் சென்னை வட்டாரங்களில் பேசப்படுகிறது.

திரு. சுப்பிரமணியம், காமராசருக்கு ஆதரவாக நாகர்கோவில் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்குபற்ற மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக காமராசரை கொண்டுவர முயற்சி?

தொடங்கினால், அது நிச்சயமாக தி.மு.க. ஆட்சிக்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தும் என்பது உண்மை. அதுவும் அண்ணா ஆட்சிப் பொறுப்பில் இல்லாத இன்றைய நிலையில் மாணவர்களின் போராட்ட உணர்வை, கழக ஆட்சியிடம் அவர்களுக்கு வெறுப்பு ஏற்படாத முறையில் 'சமாளிப்பதற்கு' தனித் திறமை தேவை. மாணவர்கள் மத்தியில் அண்ணாவுக்கு அடுத்தபடி செல்வாக்குடையவர் கலைஞர் கருணாநிதி. எனவே மாணவர் போராட்டத்தை சமாளிக்கும் பொறுப்பு அனேகமாக அவருடையதாகத்தான் இருக்கப்போகிறது.

இதற்கிடையில் கோவையில் கூடிய இந்தி பேசாத மாநிலங்களின் மாநாட்டிலும், ஆங்கிலமே இந்தியா

தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து திரு. சுப்பிரமணியத்தை இறக்கிவிட்டு, திரு. காமராசரை ஏற்றுவதற்கு இப்பொழுது முயற்சி நடந்துவருகிறதாகவும் சொல்லப்படுகிறது.

## வள்ளுவருக்கு விழா எடுப்பது காட்டுமிராண்டித்தனமாம்!

திருவள்ளுவரின் 2000 ஆண்டு நிறைவு விழாவை கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு தமிழ் நாட்டரசு பல ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. ஆனால்

# சிவாஜியை 16,191 வாக்குகளால் தோற்கடித்தார் எம்.ஜி.ஆர்.

## ஜெயாவைவிட 7400 வாக்கால் விஜயகுமாரிக்கு வெற்றி!

### சிங்கப்பூர் ரசிகர்கள் தீர்ப்பு!





**1968 ம் ஆண்டின் சிறந்த நடிகராக மக்கள் திலகம் எம்.ஜி. ஆரையும் சிறந்த நடிகையாக விஜய குமாரியையும் சிங்கப்பூர் ரசிகர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.**

1968 ம் ஆண்டுக்கான சிறந்த நடிகர் நடிகையர் தேர்வை, சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் தமிழ் மலர் ஏடு நடத்தியது. இப்போட்டியில் சிங்கப்பூர் ரசிகர்கள் பெருமளவில் பங்குபற்றினர்கள். சிறந்த நடிகராக எம். ஜி. ஆர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 34,938 வாக்குகள் கிடைத்தன.

நடிகை விஜயகுமாரிக்கு 23,493 வாக்குகள் கிடைத்தன. அதனால் அவரே சிறந்த நடிகையாக தெரிவு செய்யப்பட்டார்.

எம். ஜி. ஆர் தவிர மற்ற நடிகர்களுக்கு கிடைத்த வாக்கு விபரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| சிவாஜிகணேசன் | 18,747 |
| ஜெய்சங்கர் | 7,566 |
| ஜெமினி | 2,510 |
| ரவிச்சந்திரன் | 462 |
| ஏ. வி. எம். ராஜன் | 403 |
| டி. எஸ். பாலையா | 397 |
| நாகேஷ் | 37 |
| தங்கவேலு | 28 |
| ஏ. கருணாநிதி | 5 |
| சோ | 4 |

விஜயகுமாரி தவிர மற்ற நடிகைகளுக்கு கிடைத்த வாக்குகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| ஜெயலலிதா | 16,053 |
| விஜயா | 11,472 |
| பத்மினி | 5,170 |
| சரோஜாதேவி | 4'975 |
| தேவிகா | 719 |
| வாணிஸ்ரீ | 478 |
| பாரதி | 413 |
| ராஜஸ்ரீ | 354 |
| விஜயநிர்மலா | 254 |
| மனோரமா | 168 |
| எம். சரோஜா | 56 |

## அடுத்த வாரம்

125 படங்களில் நடித்துவிட்ட நடிகர் திலகம்


சிவாஜி கணேசனைப் பற்றி

அவரது மனைவி

கமலா

என்ன கூறுகிறார்?

அடுத்த வாரம் கலைப்பூஞ்சோலையை படிக்கத் தவறாதீர்கள்!



திரை விமர்சனம்:

## குடியிருந்த கோவில்

ஒருவன் கெட்டவனாவதும், நல்லவனாவதும், அவன் வளர்க்கப்படும் சூழ்நிலையைப் பொறுத்தே அமைந்திருக்கிறது என்ற கருத்தையே கருவாகக் கொண்டு உருவான படம்தான் குடியிருந்தகோயில்.

ஒரே தாயின் வயிற்றில் தோன்றி சந்தர்ப்ப சூழ்நிலைகளால் சிறு வயதிலேயே பிரிகிறார்கள் இரட்டைப் பிறவிகளான சேகரும், ஆனந்தனும். ஆனந்தன் தாயின் அரவணைப்பில நல்லவனாகிறான். சேகர் சமூகத் துரோகி ஒருவனால் வளர்க்கப்பட்டு கெட்டவனாக்கப்படுகிறான்.

இரட்டைப் பிறவிகளாக எம். ஜி. ஆர். இருவேடங்களிலும் நடித்துள்ளார். ஆனந்தன் பாத்திரம் அவருக்கு பழகிய ஒன்று. முரட்டுபாபுவாக தோன்றி அவர் நடித்திருப்பது புதிய தோரணி.

இரு எம். ஜி. ஆர்களின் காதலிகளாக ஜெயலலிதாவும் ராஜஸ்ரீயும் வருகிறார்கள். ஜெயலலிதா வண்ணத்தில் தகதகவென்று பளபளக்கிறார்.

குளுமையான வண்ணம். புது முறையான அடிபிடிக் காட்சிகள் படத்துக்கு விறுவிறுப்பைக் கொடுக்கின்றன.

பாடல்கள் அத்தனையும் பிரமாதம். குங்குமப் பொட்டின் மங்கலம், ஆடலுடன் பாடல், ஆகிய பாடல்கள் "டொப்.

எம். ஜி. ஆர். நடித்த 100 படங்களில் தனியிடம் பெற்ற இப்படம் இப்பொழுது சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் காட்சி தருகிறது.

—மகேஸ்



## பத்மஸ்ரீ சரோஜாதேவி!

கன்னடத்துப் பைங்கிளி பி.சரோஜாதேவி இப்போது பத்மஸ்ரீ சரோஜாதேவியாகிவிட்டார்.

கடந்த மாதம் நடைபெற்ற இந்தியக் குடியரசு தினத்தன்று குடியரசுத் தலைவரால் சரோஜாதேவிக்கு பத்மஸ்ரீ பட்டம் அளிக்கப்பட்டுள்ளது.

## ஜமுனாவின் இதழில் முத்தமிடும் ஜானகி!

பத்து ஆண்டுகளுக்கு முன்பு ''மருத நாட்டு வீரனு''க்காக வெளிப்புறக் காட்சிக்குச் சென்றிருந்தபொழுது மாம்புழாவில் எழுபத்தைந்து ரூபாய்க்கு அணில் ஒன்று வாங்கினேன். ஜாதி அணில் என்றும், அதை உயிரோடு பிடிப்பதே அபூர்வம் என்றும்பலர் சொல்லிக் கேட்டேன்.

இந்த பத்து வருடத்தில் அது என்னுடைய குணங்களை நன்கு தெரிந்துகொண்டு, நெருங்க வேண்டிய நேரத்தில் நெருங்கவும், ஒதுங்க வேண்டிய நேரத்தில் ஒதுங்கவும் செய்கிறது. சிலசமயம் அது வேகமாக ஓடி வந்து, மேலே ஒரே தாவாகத் தாவி ஏறிக்கொண்டு என் இதழ்களை முத்தமிடும்.

சில சமயம் எனக்கு படப்பிடிப்பு இல்லாத பொழுது அதனுடன் விளையாடுவேன். அப்பொழுது அதை நினைத்துப் பார்க்கையில் எனக்கு பரிதாபமாக இருக்கும்.

'பத்து வருடமாக ஜானகி தனியாக இருக்கிறதே' என்று ஜானிக்கு ஒரு ஜான் தேடித் தேடி இதுவரையும் கிடைக்கவில்லை. அப்படியே கிடைத்தாலும் பொருத்தமாகவும் இல்லை. என்னுடைய ஜானகி ஆப்பிள், திராட்சை பட்டாணி தேங்காய் இவைகளைத்தின்று திடகாத்திரத்துடன் இருக்கிறது.

வெளியில் இருக்கும் ஆண் அணில் ஒல்லியாக இருக்கிறது. எப்படிப் பொருந்தும்? எப்படியாவது அதற்கு விரைவில் ஜோடி சேர்த்துவிட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறேன்.

—இவ்வாறு கூறினார் நடிகை ஜமுனா.

## திரைவாணன் பதில்கள்

ஜே. சால்ஸ்
எட்டியாந்தோட்டை.

கே: கௌரி கல்யாணத்திற்குப் பின் ஜெய்யும், ரவியும் சேர்ந்து நடிக்கிறார்களா?

ப: இல்லை.

ஃ

கே: தெச்சணாமூர்த்தி
எகலியக்கொடை.

கே: சிவாஜி கணேசன் நடித்த நீலவானமா அல்லது எம். ஜி. ஆர். நடித்த ரகசிய பொலிஸ் 115 என்ற படமா? சென்னையில் கூடிய நாட்கள் ஓடியது?

ப: ரகசியப் பொலிஸ் 100 நாட்கள் ஓடியது. நீலவானம் 100 நாள் ஓடவில்லை!

ஃ

பொ. கலைச் செல்வி
ஏழாலை மேற்கு.

கே: எம். ஜி. ஆருக்கும், டி. எம். எஸ்ஸுக்கும் என்ன தகராறு?

ப: எம். ஜி. ஆர். நடிக்கும் ஒரு படத்திற்கான பாடல் பதிவு செய்யப்பட்டபோது. அப்பாடலைத் திரும்ப மறுபடியும் பாடும்படி டி. எம். எஸ்ஸை, எம். ஜி. ஆர். கேட்டாராம். அதற்கு டி. எம். எஸ். மறுத்துவிட்டாராம். இதுதான் தகராது.

ஃ

ஆர் கண்ணதாசன்
நீர்கொழும்பு.

கே: சிவாஜி நடித்த முதல் படம் எது?

ப: பராசக்தி!

ஃ

இ. இராஜ்
நாவல்நகர்.

கே: நீங்களும் ஓர் சினிமாப் போட்டி நடத்தினால் என்ன?

ப: போட்டி நடத்தித்தான் வாசகர்களைக் கவர வேண்டும் என்ற அவசியம் எமக்கு இல்லையே!

ஃ

ஏ. ஜே. சுலைகாமுகடீன்
திருக்கோணமலை.

கே;1968 வெளியான எம். ஜி. ஆரின் படங்களில் ரகசியப் பொலிஸ் 115, ஒளி விளக்கு என்பன நூறு நாட்கள் ஓடி வெற்றி பெற்றனவா?

ப: ஆம்!

# தமிழ் இராச்சியம் அமைக்கும் தி.மு.க. திட்டம் பூர்த்தியாம்

## சு. கட்சி ஏடு கரடி விடுகிறது!

இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் உள்ள தமிழர்கள் ஒன்று சேர்ந்து ஐக்கிய தமிழ் இராச்சியமொன்றை ஏற்படுத்துவதன் பொருட்டு திராவிட முன்னேற்றக்கழகத்தினரால் ஆரம்ப ஆக்க வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாகத் தேவையான பிரசார வேலைகளைச் செய்வதற்கு அக்கட்சி தயாராகவுள்ளது. இந்த உக்கிரமான தமிழ் இன உணர்ச்சியைத் தூண்டு முகமாகச் சினிமாத் தியேட்டர்கள் உட்பட பல்வேறு கலாசார நிலையங்களையும் உபயோகப்படுத்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் தீர்க்கமான முடிவு எடுத்துள்ளனர்"

—இவ்வாறு சுதந்திரக்கட்சி சார்பு ஏடான ஸ்ரீலக்க 26-1-69ல் வெளியிட்டுள்ள செய்தியொன்றில் கூறப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"தென் இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தினால் நடத்தப்பட்ட இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மகா நாட்டின் முக்கிய குறிப்புகள் அடங்கிய, இன உணர்ச்சியை தூண்டக் கூடியதொரு சினிமாப் படம் இப்போது இங்குள்ள தியேட்டர்களில் காண்பிக்கப் படுகின்றது.

"சத்திமிகு தமிழ் ராஜ்யமொன்றை ஏற்படுத்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இத் தமிழ் ஆராய்ச்சி மாகாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி. என். அண்ணாத்துரை, அக்கட்சியின் செயலாளர் கருணாநிதி, கழகத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் பேசிய பேச்சுக்கள இச்சினிமாப் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

"இந்தச் சினிமாப் படம், இலங்கைதமிழ் மக்களையும் தென் இந்தியத் தமிழ் மக்களையும் ஒன்றுபடுத்தி ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்துவதற்கான தூண்டு கோலுக்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் பிரசார ஆயுதமாகிஉள்ளது.

"இலங்கைத் தமிழ் மக்களின் இனபேதத்தைத் தூண்டுகிற வகையில் மிக நுண்முறையாகக் கையாளப்பட்டு வரும் பலவிதத் திட்டங்களில் இதுவும் ஒன்றாக இருக்குமென்று நம்ப முடிகின்றது.

---

## 'சமஷ்டியே எங்கள் கொள்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிய அதிகாரம் இல்லாமல் இருந்தால் அதை அவருக்குக் கொடுப்பதற்கு இந்தப் பாராளுமன்றம் ஆயத்தமாக இருக்கிறது. இது விடயத்தில் தேசிய உயர் கல்விச் சபைக்கு வேண்டிய அதிகாரங்களையும் கொடுக்க இப்பாராளுமன்றம் ஆயத்தமாக இருக்கிறது. இது விடயத்தில் இனி நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால் கௌரவ பிரதமர் அவர்களிடந்தான் போகவேண்டும்.

கல்வித்துறையிலே தமிழ் மக்களுக்கு முன்பு பல வாய்ப்பு கிடைத்திருக்கலாம். பழைய காலத்தைச் சாட்டிச் சாட்டி எதிர் காலத்திலே தமிழ்மக்களுடைய வாழ்க்கையைப் பாழாக்கவோ, அழிக்கவோ நாங்கள் அனுமதிக்க முடியாது.

அடுத்ததாக் கனிட்ட பல்கலைக் கழகங்களைப் பற்றி மட்டும் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

அரசியல் லாபத்துக்காக மட்டும் நாங்கள் பேசுவதோ சரியில்லை. உண்மையை நாங்கள் நடப்பதோ மறைக்கக்கூடாது. இந்த நாட்டிலே நாங்கள் சமஷ்டி அரசியலை விரும்புகின்றோமென்றால், சிங்கள மக்களோடு நாங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும்—மத்தியிலே ஒரு அரசு இருக்க வேண்டும் — தெவுந்தராவிலிருந்து பருத்தித்துறைவரை நாங்களும் இருக்க வேண்டும். அவ்வாறாகத்தான் சமஷ்டி நாடுகளெல்லாம் இருக்கின்றன.

அந்தக் கொள்கைதான் எங்களுடைய கொள்கை. ஆனால், இன்று என்ன நடக்கின்றது?

எங்களைக் குறை சொல்ல வேண்டாம். பிரிந்து போங்கள் என்று நீங்கள் சொன்னால் நாங்கள் போக ஆயத்தமாக இருக்கிறோம். துக்கத்துடன் தான் போவோம். நாங்கள் போக விரும்பவில்லை. எங்களை நீங்கள் பிரிக்கிறீர்கள்.

உதாரணமாகப் பாருங்கள்: பலாலியிலேமட்டும தமிழ் இனத்துக்கு ஒரு கனிட்ட பல்கலைக் கழகம் கொடுக்கப் பட்டிருக்கிறது. கொழும்பிலிருந்தாலும் சரி வேறு எங்கே படிக்கின்ற தமிழ் மாணவர்களாக இருந்தாலும் சரி அங்கேதான் போக வேண்டியிருக்கின்றது. இத்தகைய ஏற்பாடுகளினால் நீங்கள் தான் பிரிக்கின்றீர்கள்.

இரு மொழிகளிலும் கற்பிக்க வேண்டியிருப்பதினால் அதிகசிரமங்கள் இருக்குமென நீங்கள் ஒருவேளை சொல்லலாம். நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். அந்தச் சிரமமா அல்லது தமிழினமும் சிங்கள இனமும் ஒன்றுபட்டு வாழ வழிகோலுவதா பெரிதென்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

மட்டக்களப்பில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படவில்லை. நாங்கள் மட்டக்களப்பில் கனிட்ட பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கபபட வேண்டும் என்று போராடுகிறோம், போராடிக்கொண்டே இருக்கிறோம்.

கொழும்பு தெற்கில் எத்தனை தமிழர்கள் இருக்கிறார்கள் என்பது கொழும்பு தெற்குப் பிரதிநிதிக்குத் தெரியும். எங்களுடைய இராஜாங்க அமைச்சரவர்களுக்கும் தெரியும். அந்தப் பகுதியில் வாழும் தமிழ் மக்களை பலாலிக்குப் போங்கள் என்று சொன்னால் எவ்வளவு கஷ்டம் அவர்களுக்கு. எவ்வளவு செலவு செய்ய வேண்டும்?

ஆகவே, இந்தக் குறையை நீக்கப்போதிய அளவு தமிழ் மக்கள் இருக்கும் இடங்களில் தமிழிலும் கற்பிக்க ஒழுங்குகள் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் பகுதிகளில் சிங்கள மாணவர்கள் போதிய அளவு இருந்தால் அவர்களுக்குச் சிங்களத்தில் கற்பிபபதற்கு ஒழுங்குகள் செய்யுங்கள். அதை நாம் எந்தக் காலமும் தடுக்கவில்லை. அதை வரவேற்கிறோம் என்பதை இங்கே கூற விரும்புகிறேன்.

(சனவரி 22ந் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை)

---

### அரசாங்க சேவையி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க சேவையிலிருந்து முடிந்தவரை ஒழித்துக்கட்டிவிட முடிவு செய்து விட்டார்களா? இன்றேல் சிங்களப்பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கும், சிங்களப் பரீட்சைக்கு தோற்றத் தயாராக இருப்பதாக அறிவிப்பவர்களுக்கும் சிங்களம்படிப்பதற்கு வசதி செய்து தரும்படி கேட்போருக்கும் வேலை நீக்க அறிவித்தல்கள் கொடுக்கப்படுவது ஏன்? இது அரசாங்கத்தின் கொள்கைக்கு முரண்பட்டதல்லவா? — இவ்வாறு தமிழ் அரசாங்க ஊழியர்கள் கேட்கிறார்கள்.

தமிழ் ஊழியர்களைச் சிங்களப் பரீட்சையில் சுலபமாக தேறுமல் தடுப்பதற்கான மற்றொரு சூழ்ச்சி சிங்களக் கேள்வித்தாளையும் கடினமாகத் தயாரிக்கிறார்கள்— இப்படியும் அரசாங்க ஊழியர்கள் திடமாக கருதுகின்றனர்.

இப்போக்கைத் தடுத்து நிறுத்த உடனடியாக தமிழ் எம். பி. க்கள் தக்க நடவடிக்கையெடுத்தாக வேண்டும் என்று அரச ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

---

### எங்கே நீயோ...

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

யாது. என் நிம்மதியும் அமைதியும் குலைவதை நீ விரும்புவதாக இருந்தால்உன் விருப்பம் போல நீ இறங்கிக் கொள் என்பான்.

அந்த சுலோகத்திற்கு அவள் கட்டுப்பட்டுவிடுவாள். எப்படியோ இந்த மோட்டாரில் ஒருநாள் நீங்கள் ஏறத்தான் போகிறீர்கள். எமது கல்யாண ஊர்வலம் இதே மோட்டாரில் தான் நடக்கப் போகிறது என்று அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக காதோடு காதாகச் சொல்வாள் அவள்.

அவள் எண்ணத்தை நினைத்துச் சிரிக்கும் அவன் தன்னை மறந்தவனாய் இப்போதும் வாய்விட்டுச் சிரித்தான். அப்போது மோட்டார் ஒரு குலுக்குக் குலுக்

கியது. முன்னால் இருந்த ஏகாம்பரம் பின் பக்கந் திரும்பி அவனை ஒருதரம் முறைத்துப் பார்த்தார். அந்தப் பார்வை அவன் எண்ணக் குவியல்களையெல்லாம்பஸ்மீகரமாக்கசோகம் நிறைந்த விழிகளால் அவரைப் பார்த்தான் அவன்.

—வளரும்

---

### எமது கோரிக்கை..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாண மக்கள் மனதில் இந்தக் கேள்விகள் எழுந்திருக்கின்றன. காலத்துக்குக் காலம் ஆட்சி பீட மேறும் அரசாங்கங்கள் தொடர்ந்தும் மட்டக்களப்பு மக்களின் அதி முக்கிய தேவைகளைப் புறக்கணித்து வந்திருக்கின்றன. இந்தப் பொதுவான தேவைகளை அரசாங்கம் மட்டக்களப்பு மக்களுக்குச் செய்து கொடுக்காமல் தட்டிக் கழித்துக் கொண்டே வந்திருக்கிறது.

#### செவிடன்காதில் சங்கு

இலங்கையின் இதரபாகங்கள் உலக நாடுகளில் இருந்து கிடைக்கும் கோடிக்கணக்கான ரூபாவால் அபிவிருத்தியடைந்த நேரத்தில் தொடர்ந்தும் எங்கள் பகுதி புறக்கணிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை மக்கள் மிக்க கவலையுடன் கவனித்துக் கொண்டு வருகிறார்கள்.

அரசாங்கம் தொடர்ந்தும் இந்த நிலையில் கருமமாற்றது இலங்கையின் உணவில் பெரும் பங்கினை உற்பத்தி செய்து கொடுக்கும் கிழக்கு மாகாண மக்களின் அபிலாட்சைகளை நிறைவேற்றிவைக்க முன்வர வேண்டும். உலக நாடுகள் கொடுக்கும் அபிவிருத்திப் பணத்தில் ஒருகணிசமான தொகை கிழக்கு மாகாணத்தில் பாலங்கள் அமைக்கவும், விவசாயத்துக்குத் தேவையான குளங்கள் அமைக்கவும் கால்வாய்கள் அமைக்கவும், மீன் பிடித் துறைமுகங்களை நிர்மாணிக்கவும், கனிட்ட பல்கலைக் கழகம், கனிட்ட தொழில் நுட்பக் கல்லூரி, தாதிமார் பயிற்சிக் கல்லூரி முதலியவற்றை அமைக்கவும் எங்களுக்கு வழங்க வேண்டும்."

---


### 'ஓடிப்போனவன்' வெளியீட்டு விழா

சுதந்திரன் வளர்மதியில் இரு ஆண்டுகளுக்கு முன் திரு. க. நவசோதி அவர்களால் எழுதப்பட்ட சிறுவர் இலக்கியமான 'ஓடிப்போனவன்' இப்போது நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

இந் நூல் வெளியீட்டு விழா இம மாதம் 10ம் திகதி கொழும்பில் நடைபெறும் என்று தெரிகிறது.

---

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.



# கேட்டதும் இரசித்ததும்

அசரீரி

அண்மையில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற நாடக விழாவினை நேயர்கள் அறிவார்கள். தொடர்ந்து ஏழு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

இந்த விழாவினைச் சிறப்பிக்கும் பொருட்டு ஒரு நாழிதழ் அதன் இரண்டு பக்கங்களைப் பாழாக்கி யிருந்தது. நாடகங்களில் நடித்தவர்கள் பற்றியோ அல்லது அந்நாடகங்களின் தரங்கள் பற்றியோ எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

உண்மையைக் கூறப்போனால் 'நாடகம்' என்று கரடிக் கூச்சல் போடும் இது போன்ற பத்திரிகைகளால் நாடக வளர்ச்சிக்கு ஒரு வித பயனுமில்லை. வியாபாரமே அவைகளின் நோக்கம்.

இன்று சில காலங்களுக்கு முன்னால் தமிழ் நாடகங்களையும், சினிமாப் படங்களையும் பார்த்து இரசித்துக் கொண்டிருந்த சிங்கள மக்கள் இன்று சொந்தமாக அவைகளை நடத்தி வெற்றியும் கண்டு முன்னேறி வருகிறார்கள். காரணம், சிங்கள மக்கள் தங்கள் கலையை, கலாச்சாரத்தை வளர்க்க வேண்டுமென வெறிகொண்டிருக்கிறார்கள். அதற்காக ஆதரவும் கொடுக்கிறார்கள்.

தமிழர்களுக்கு யார் போட்ட சாபமோ தெரியவில்லை! விமோசனம் கிட்டவில்லை!

மனதில் ஒன்றை வைத்து, வெளியில் மூன்றைக் கூறித் தன்னையும் ஏமாற்றி மக்களையும் ஏமாற்றும் சின்னப் புத்தி எமக்கு இருக்கு மட்டும் விமோசனமும் இல்லைத்தான்.

ஒரு நாடகத்தை மேடையேற்றுவதென்பது சாதாரண விஷயமல்ல! இரவு பகலாக நீண்ட நாள் உழைத்து நாடகத்தை எழுதுகிறவன் ஒருவன். இந்த எழுத்தாளன் இல்லை என்றால் நாடகக் கலையில்லை. சிலையைச் செதுக்குகின்ற சிற்பி போன்றவன் நாடகாசிரியன். சிலைக்கு உயிர் கொடுக்கின்ற பணி நடிகர்களுடையது. அந்த உயிர்ச் சிலையை காட்சிக்குக் கொண்டு வந்து நிறுத்துகின்றவன் நெறியாளன்.

நாடக விழாவின் கடைசி நாள் நாடகம் 'சாணக்கியன்' இந்த நாடகத்தை எழுதியவர் எஸ். பொன்னுத்துரை அவர்கள். அவர் அங்கு மறைக்கப் பட்டுள்ளார். ஒருகாலத்தில் எழுத்துத் துறையில் பத்திரிகைகளை ஒருகைபார்த்த அவர் தற்போது 'பென்சன்' பெற்றிருக்கிறார் என்ற அர்த்தமாயிருக்குமோ என்னவோ தெரியவில்லை.

பொன்னுத்துரையின் சாணக்கியன், சானாவின் சாணக்கியனுகப் புதுச் சரித்திரம் பெற்றது. நாடக வளர்ச்சிக்கென இரு பக்கங்களை ஒதுக்கியிருந்த பத்திரிகையில் கூட அவரின் பெயரைக் காணவில்லை.

நாடக விழா அனுபந்தத்தில் எழுதியவர்கள் அத்தனை பேர்களும் தங்களைவிட்ட சூரர்கள் நாடகத்துறையில் இல்லையென்ற விதத்தில் ஒலமிட்டிருந்தார்கள். சொல்வது எளிது, செய்வது அரிது என்பதை நாம் இங்கு உணர வேண்டும்.

ஆங்கிலத்தில் ஒரிரு நூல்களை வாசித்து விட்டு, அது தான் தமிழ் நாடகத்துக்கும் இலக்கணம் என்று கூறுகின்ற சிலர் இருக்கிறார்கள். அடி நாளில் தென்னாட்டிலிருந்து வந்த நாடகங்களைப் பார்த்து விட்டு, அன்று கண்ட அதே பாணிதான் இன்றும் நாடகமாயிருக்க வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறவர்களும் இருக்கிறார்கள். சினிமாவைக் கொப்பியடித்து நாடகத்தைக் கெடுக்கிறார்கள் என்று ஒலமிடுகிறவர்களும் இருக்கிறார்கள். இப்படிப் பலவிதமான வைத்தியங்கள் பலவிதமாக நாடகத்துக்கு இலக்கணம் வகுப்பதை நாம் கேட்டும் படித்தும் வருகிறோம்.

இவ்விதம் இலக்கணம் கற்பித்து, இந்த வரம்புக்குள் தான் நாடகம் இருக்க வேண்டுமென்று கூறிவரும் சிலராலேயே எமது நாடகம் அந்த வரம்புக்குள்ளேயே கிடந்து செத்துக் கொண்டுவருகிறது.

பழமையிலிருந்தே நாம் புதுமையைச் சிருஷ்டிக்கிறோம்: நாடகத்திலிருந்தே சினிமா வளர்ச்சி பெற்றது. நாடக உலகில் போற்றப்படும் டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகங்களிலும் சினிமா உத்திகள் கையாளப்படுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. காலஞ்சென்ற கலைவாணர் நாடகங்களிலும் அதனைக் கண்டோம்.

எழுத்துக்களுக்கெல்லாம் 'அ' முதல் என்று சொல்லி, அதனை அரிவரியில் ஆரம்பித்துப் படித்தோம் அன்று! இன்று 'ப' வில் ஆரம்பித்து படம்பார், பாடம்படி என்ற நிலையில் இருக்கிறோம். 'அ' எழுதுவதைவிட 'ப' எழுதுவதில் வேகம் இருக்கிறது. விளக்கமும் இருக்கிறதுஎன்பதை நாம் ஒப்புக்கொள்ள மறுக்கலாமா? அதேபோல் நாடகத்திலும் புதுமை கண்டால் என்ன பிழைத்து விடும்?

எங்கள் நாட்டிலே நடிகர்களைவிட நாடக மன்றங்கள் ஏராளம். நாடக மன்றங்களை விட மேடை யேற்றப்படும் நாடகங்கள் ஏராளம். அவைகளில் தரமற்றவை பல. அவைகளைப் பார்த்துச் சலித்த மக்கள் நல்ல நாடகங்களை 'ஓசி' யில் பார்க்கப் பயப்படுவதிலும் ஞாயமில்லாமல் இல்லை!

நாடகவிழாவில், நாடகத் தமிழில் மிளிர்ந்த இருநாடகங்களில் சலோமி ஒன்று. மற்றது 'சாணக்கியன்' சலோமி லடீஸ் வீரமணிக்கு வெற்றி நாடகம், சாணக்கியன், சானாவின் தயாரிப்புக்கும் எஸ். பொன்னுத்துரையின் எழுத்துக்கும வெற்றி நாடகமாயினும் சலோமி, சாணக்கியனை விட நல்லதோர் மேடை நாடகமாகும்!



தொடர் கட்டுரை

# விவேகானந்தரும் மகாத்மா காந்தியும்

## பிளேக்நோய்பரவியநேரத்தில்!

1896ல் பம்பாயில் பிளேக்நோய் பரவியது. மக்களுக்கு காந்திஅடிகள் மகத்தான சேவை செய்தார். அதே ஆண்டில் சுவாமிவிவேகானந்தர்அமெரிகாக்விலும் இங்கிலாந்திலும் இந்துமதத்தின் புகழை நிலைநாட்டி வந்தார். ஆகவே அச்சமயம் காந்தியும் விவேகரும் சேர்ந்து கடமையாற்றும் வாய்ப்பைஇழந்தனர்.

1899ல் கல்கத்தாவில் பஞ்சமும் பிளேக் நோயும் பரவின. மக்களுக்கு சுவாமி விவேகானந்தர் மகத்தான சேவை செய்தார். அதே ஆண்டில் காந்தி மகான் தென்னுபிரிக்காவில் இந்தியரின் உரிமையை நிலைநாட்டி வந்தார். ஆகவே இச்சமயத்திலும் இருவரும் சேர்ந்து கடமையாற்றும் வாய்ப்பை இழந்தனர்.

சேவையைப் பற்றி இருவரும் ஒரே விதமான கருத்தையே அள்ளி வீசினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 'ஒருவர் இத்தகைய சேவையைச் செய்வதில் இன்பம் கொண்டாலன்றி சேவை செய்வதில்அர்த்தமே இல்லை. வெளிப்பகட்டுக்காகவோ, பொதுஜன அபிப்பிராயத்திற்குப் பயந்தோசெய்வதாயின், அப்படிச் செய்பவரின் ஆன்மவளர்ச்சியை அது குன்றச்செய்து உணர்ச்சியையும் நசுக்கிவிடும்.

சந்தோஷம் இல்லாமலும் சேவையினால் செய்கிறவருக்கும் நன்மையில்லை, சேவை பெறுகிறவருக்கும் நன்மையில்லை. மகிழ்ந்து செய்யும் சேவையுடன் ஒப்பிட்டால், மற்றெல்லா இன்பங்களும் உடைமைகளும் பயனற்றவை என்றவகையில் மங்கிப்போகின்றன. என்கிறார் காந்தி.

அதே நேரத்தில் விவேகானந்தர் சேவை பற்றிக் கூறுவதையும் பாருங்கள்.' எனது குருநாயகன் என் ஆயுளின் இறுதி வரையிலும் என்னை மடத்தின் தோட்டி வேலை செய்து வரும்படி ஏவினால், நான் அவர்கள் கட்டளையைச் சிரமேற்கொண்டு சேவை செய்வேன். என்னுயிர்போமளவும் நானுழைத்துப் பிறரைத் தயாரித்துச் சமய சேவை நடைபெறுமாறு செய்வேன். எனக்கு ஓய்வென்பதில்லை. சேவை செய்தே இறப்பதில் எனக்கு உவகை அதிகம். சேவையை நான் உயிரினும் மேலாகக் கருதுகிறேன். நாம் உலக சேவையினிமித்தம் நமது உடம்பைச் சாருகப் பிழிந்தால் அந்த மகிமையால் மகா பராக்கிரம சாலிகளும், வரப்பிரசாதிகளும்தோன்றி உலகத்தைச் சீர்திருத்தி விடுவார்கள்...! என்கிறார் விவேகானந்தர்.

பிறரிடம் அன்பு கொள்ள வேண்டியதையும் பிறருக்குச் சேவை செய்ய வேண்டியதன் அவசியம் பற்றியும் இவர்கள் மாத்திரமல்லாமல் உலகில் பல் வேறிடங்களில் தோன்றிய உத்தமபுருடர்களெல்லாம் இவற்றை வலியுறுத்தியுள்ளார்களென்பது குறிப்பிடத்தக்கது. கடவுளை அடைவதற்கு இதுவே

ந·அனந்ததேவன்

வழி என்பதையும் சர்வமதங்களும் சந்தேகத்திற்கிடமின்றி அறுதியிட்டுக் கூறுகின்றன.

ருஷ்ய அறிஞரான டால்ஸ்டாய் ஓர் இடத்தில் பின்வருமாறு கூறுகிறார்—'கடவுளுக்குப் பிரார்த்தனை செய்து அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமானால் ஒவ்வொருவரும் தன் வாழ்நாள் முழுவதும் மற்றவர்களிடம் அன்பு செலுத்தி அவர்களுக்கு சேவை செய்வது ஒன்றே ஏற்ற வழியாகும்! என்கிறார் டால்ஸ்டாய். ஆகவே உலகமெல்லாம் கடவுளை வெவ்வேறு பெயர் சொல்லி வெவ்வேறு மார்க்கத்தை அனுஷ்டித்தாலும் கடவுளைக் காண்பதற்கு ஒரே பாதையைத்தான், தெரிவு செய்திருக்கிறார்கள். கடவுள் நம்பிக்கையற்றவர்களும் பிறரிடம் அன்பாக இருந்தால்தாங்களாகவே கடவுளைச் சென்றடைவார்கள் என்பதையே இதனால் உணரக்கூடியதாக இருக்கிறது.

## (9)சுதந்திரம் பெறுவதற்கு வழி காட்டியவர் விவேகானந்தர்

ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல் இந்திய நாடு சுதந்திரமடைய வேண்டுமென்பதில் சுவாமி விவேகானந்தருக்கிருந்த ஆர்வம் யாரும் இதுவரை அறிந்துகொண்டிராத மர்மமாகவே தெரிகிறது. சுவாமிகளைக் கடவுளாகவே கருதி வணங்கும் ஒருவரிடம் இதுபற்றி நான் கேட்டபோது 'அவர் துறவி. இந்திய நாடு சுதந்திரமடைவது பற்றி அவர் கவலையே அடைந்திருக்கமாட்டார்' என்று அபிப்பிராயப்பட்டாரெனின் ஏனையோரைப்பற்றிக் கூறவும் வேண்டுமா?

சுவாமிகள் செய்ததெல்லாம் 39 வருடகாலத்திற்குள் அடங்கும். அதிலும் அவரது உண்மையான உழைப்பின் காலம் பத்து வருடங்களுக்குள் அடங்கிவிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் அவர் சாதித்தவை நாம் வாழ்நாள் முழுவதும் முயற்சித்தாலும் முடியுமோ என்பது சந்தேகமே. இந்தியா முழுவதும் யாத்திரை செய்த அவர் ஒரு சமயம் கௌபீனத்துடன் மாத்திரம் யாத்திரை செய்ததும் குறிப்பிடத்தக்கது. கௌபீனத்துடன் ஒரு சமயம் அவர் யாத்திரையை மேற்கொண்டபோது ஒரு வனத்தில் அவர் கௌபீனத்தை வெய்யிலில் உலர வைத்துவிட்டு குளித்துக் கொண்டிருந்தபோது ஒரு குரங்கு அவரது கௌபீனத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டது. இறைவன் சித்தம் அதுவானால் நான் நிர்வாணமாகவே எனது யாத்திரையை மேற்கொள்வேனென எண்ணிக்கொண்டு அவர் சென்றபோது வழியில் ஒருவர் சந்தித்து ஒரு கோவணத்தை அவருக்கு அன்பளிப்புச் செய்து மறைந்து சென்றார். அப்படியான துறவியான சுவாமி சுதந்திரத்திற்காக என்ன செய்திருப்பாரென சந்தேகப்படுவது மனித இயல்பே.

# மங்கையர் சங்கம்

## வறுமைப் பிடியில் உழலுவதற்கு அதிகப் பிள்ளைகளே காரணம்!

கருத்துமேடை

கடந்த கருத்து மேடை விவாதங்களில் பல சகோதரிகள் அனேக பிள்ளைகள் பெறுவது நல்லதா? கூடாதா என்ற விடயத்தைப் பற்றி ஆதரித்தும் எதிர்த்தும் தங்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள். அவரவர்கள் கருத்து ஒவ்வொரு வகையில் விளக்கம் காட்டுவதாக அமைகிறது.

வாழ்க்கையில் இன்பமும் இருக்கிறது. அதற்கிடாக துன்பமும் இருக்கிறது. இரண்டில் துன்பத்தின் சுமை பெரும் சுமை. வாழ்க்கையில் பெரும்பாலும் இதன் ஆதிக்கம்தான் அதிகம். துன்பம் நேர்ந்த காலத்தில் அரிதாகப் பெற்ற மனிதப் பிறவியே கசந்துப் போகிறது. அன்பு வெறுப்பாகின்றது. செய்யும் காரியங்களில் வேதனை முணுமுணுக்கின்றது. உலகமே ஒரு சோதனைக் கூடமாக மாறிவிட்டதைப் போன்ற பிரமை ஏற்படுகிறது.

மனைவியின் குளிர்ந்த பார்வை நெருப்பாகச் சுடுகின்றது. கொஞ்சும் மழலை நஞ்சாகிறது. உடலில் ஒவ்வொரு உறுப்பும் சுமையாகின்றது. மூச்சு உயிரைத் துளை போடுகின்றது வாழ்க்கையில் துன்பத்தைத் தவிர இன்பம் இல்லை என்ற முடிவுக்கு வரத் தோன்றுகிறது.

இத்தகைய துன்பநிலை மனிதனுக்கு வர முதற்காரணமாக இருப்பதே குடும்ப பாரம் தான். இக்குடும்ப பாரம் ஏற்படுவதற்கு மேற்கோளாக இருப்பது பெரும் பிள்ளைகளின் தொகை அதிகரிப்பதேயாகும். இதனால் மனிதனுக்கு வாழ்க்கைப் பிரச்சினை அதிகமாகி தன்வருவாய்க்கு ஏற்ப செலவு

இ. செல்வகுலராணி
திருமலை.

செய்யும் தகுதியற்று வறுமைப்பிடியிலே உழன்று வாழ்க்கை வெறுத்து தற்கொலையையே நாடுகின்றனர். இதனை நாட்டின் நடப்பில் நாள் தோறும் நடக்கும் சம்பவங்களில் இருந்தே காணலாம்.

(11-ம் பக்கம் பார்க்க)

# கண்ணன் வருவான்....!

எமது சிறுகதை

**நான்** அப்போதுதான் காரியாலயத்திலிருந்து வந்தேன். உடம்பெல்லாம் ஒரே அசதி. உடைகளை மாற்றிவிட்டு அருகிலிருந்த சாய்மனைக் கதிரையில் ஒரு கையை தலைக்கு அணையாகக் கொடுத்தவாறே படுக்கலானேன். என் மனைவி எனக்கருகில் காப்பிக் கிண்ணத்தை வைத்துவிட்டு பேசாமல் அப்பால் சென்று ஒரு மூலையில் முடங்கிக் கொண்டாள்.

வாயும் கையும் காப்பியுடனும் காப்பிக் கிண்ணத்துடனும் கலந்துறவாடின. என் மனம் உதிர்ந்துபோன நாட்சருகுகளைப் பொறுக்கிச் சேர்ப்பதில் முனைந்துகொண்டது.

ஐந்து வருடங்களுக்குமுன் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி. மறைந்துபோன நிகழ்ச்சிதான். ஆனால் மறக்கமுடியாத ஒரு நினைவு. அன்று நானும் என் நண்பனும் கோல்பேஸ் கரையிலிருந்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்தோம். அப்போது திடீரென்று ஒரு பந்து என முன் வந்து விழுந்தது. அப்பந்தைக் கையால் எடுக்குமுன்...

''பந்தைத்...தாங்க...''

யாழ் இசையைப் பழிக்கும் குரல் கேட்டு அப்பக்கம் திரும்பினேம்.

பருத்த மாதுளையின் பிரித்த முத்துப்போல் உதட்டில் இள நகையொன்றை இழைந்தோடவிட்டவாறே நின்றாள் அவள். தரையில் போட்ட மீன் துள்ளிக் குதிப்பதைப் போன்று அவள் கண்களில் இருந்த விழிகள் பரக்கப் பரக்கப் பார்த்தன.

''தாங்க...பந்தை...'' மறுபடியும் அதே குரல், அதைத் தொடர்ந்து இரு தளிர் கரங்கள் பந்தை நோக்கி நீண்டன. இரு கரங்களையும் சேர்த்து அந்த நாலு வயதுச் சிறுமியை அள்ளி எடுதது முத்தம் கொடுத்தேன் நான்.

''ஏய் மாலா நேரமாகி விட்டது வா வீட்டிற்குப் போகலாம்.''

எமக்கு மிக அண்மையில் ஓர் குயிலை ஒதத குரல் கேட்டது. இருவரும் அக்குரலுக்குரியவளை நோட்டமிட்டோம்.

முழு நிலவுபோன்ற முகம்: அதில் பிறை நிலவைப் போன்ற நுதல். வேலை ஒத்த இரு கண்கள். அங்கு வேவு பார்க்கும் இரு விழிகள். கோவைக் கனி போன்ற இதழ். அதனுள் கோவைச் சரம் போன்ற பற்கள். தளிர் கொடி போன்ற இடை. அதைத் தொட்டுத் தழுவும் கூந்தல். பட்டுப் போன்ற பாதம். அதில் பவளம் போன்ற நகங்கள்.

''இந்த மாமா என்னை விடுகிறார் இல்லை சித்தி''

## இ. பாஸ்கரன்

குழந்தையின் விண்ணப்பத்தைக் கேட்டு திடுக்கிட்டுக் கைகளிரண்டையும் விலக்கினேன். அக்குழந்தை துள்ளிச் சென்று அந்தக் குமரியின் கைகளைப் பற்றிகொண்டது. இரு அழகு ரதம் அசைந்து போவதைப் போன்றிருந்தது. அவர்களின் நடை.

''வட்ட எ பிரிட்டி கேள்'' என் வாய் முணுமுணுத்தது.

டேய் யார் பிரிட்டி கேள்... குழந்தையா...இல்லை...'' நண்பன் கேட்டான்.

நான் திடுக்கிட்டு எழுந்தேன். நண்பனும் எழுந்து கூட நடந்தான். மறுநாள் நண்பன் வரவில்லை. நான் மட்டுந்தான் கோல்பேஸ் கரையிலிருந்து வருவோர் போவோரை பார்வையிட்டுக் கொண்டிருந்தேன். திடீரென்று என் கண்முன் ஒரு மின் வெட்டு. உற்றுப் பார்த்தேன் அவள்தான்...அவளே தான். அருகில்வருவது அதே குழந்தை. தூர வரும் போதே குழந்தை என்னை கண்டுவிட்டு ''நேத்து வந்த மாமா இந்தைக்கும் வந்திருக்கார் சித்தி'' என்று குதூகலித்தவாறே துள்ளி வந்து என் மடியில் உரிமையுடன் அமர்ந்துகொண்டது.

அன்றுதான் அக்குழந்தையின் சித்தியை நேருக்கு நேர் நோக்கி முறுவலித்தேன். அவளும் முறுவலித்தாள். நாட்கள் நகர்ந்தன. காதல் கனிந்தது எமக்குள். அதுவே ஈற்றில் திருமணமாக உருவெடுத்துவிட்டது. திருமணம் நடந்து மூன்று வருடங்கள் வரை எமக்குள் இருந்த அன்பு, நெருக்கம் பிணைப்பு... வார்த்தைகொண்டுசொல்ல முடியாது.

ஆனால் கடந்த இரண்டு வருடகாலமாகஎங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் பொத்தல் விழுந்துவிட்டது. வேறு ஒன்றுமில்லை. கொஞ்சிக் குலாவ ஒரு குழந்தை இல்லை என்பதுதான் அதற்குக் காரணம். இதனால் எமக்குள் ஒரு ஏக்கம், தவிப்பு ஏற்படத் தொடங்கிவிட்டது. நான் ஒருவாறு இக்குறையை மறந்து வாழமுடியும். ஆனால் அவளால் அது முடியவே முடியாது. அவள் பெண் அல்லவா...!

அதே நினைவோடு தூங்கிவிட்டேன். என்னை யாரோ தொட்டு உலுப்பும் உணர்வு வரவே கண் விழித்துப் பார்த்தேன். என் மனைவி சாப்பிட வரும்படி அழைத்தாள். எழுந்து சென்று முகத்தை அலம்பிவிட்டு சாப்பிட உட்கார்ந்தேன். அவளும் கூட இருந்து —ண்டாள்.

திடீரென்று ஏதோ நினைவு வரப்பெற்ற என் மனைவி ''ஏங்க! நாங்கள் இருவரும் டாக்டரிடம் போய் எமது உடம்பை சோதித்துப்பார்த்தால் என்னங்க?'' என்று கேட்டாள் துணுக்குற்றேன் நான். ''திடீரென்று ஏன் உனக்கு இந்த நினைவு.'' புன்சிரிப்புடன் கேட்டேன்.

''நினைவொன்றுமில்லை, எதிர் வீட்டுக் கோமதிதான் என்னைக் கேட்டாள்...'' என்று இழுத்தாள் என் மனைவி. அதற்குப் பதில் கூறாமலே சாப்பிட்டுவிட்டு எழுந்தேன். மீண்டும் அதே கேள்வியைக் கேட்டாள் அவள்.

அவளை உற்றுப் பார்த்தேன். அவள் கண்கள் பனித்திருந்தன. அவளுக்காக என் உள்ளம் பாகாய் உருகியது இதோ பார் சாந்தி! நீயும் நானும் நடத்திய ஐந்து வருட கால வாழ்க்கையில், இன்னும் எமக்குக் குழந்தை பிறக்கவில்லையென்பதிலிருந்து நானோ அல்லது நீயோ ''மலடு'' என்ற துர்ப்பாக்கிய நிலையை அடைந்துள்ளோம் என்பது தெளிவாகத் தெரிகின்றது. எம்முள் யார் மலடு என்பதை அறிவதற்காகத்தான் டாக்டரிடம் போகவேண்டும். ஆனால் இதில் ஒரு சிக்கல் இருக்கின்றது சாந்தி. அதாவது டாக்டர் எம்மைச் சோதித்து, எம்முள் யாராவது ஒருத்தரை 'மலடு' என்று சுட்டிக்காட்டும்போது, மற்றவருக்கு அவர் மீது வெறுப்பு ஏற்படுவதற்கு இடமுண்டு. இதனால் எமக்குள் இருக்கும் பரஸ்பர ஒற்றுமை நீங்கிவிடுமோ என்று பயப்படுகிறேன்.'' என்று கூறியவாறே அவளை நோக்கினேன்.

அவள் என்னை கூர்ந்து பார்த்துவிட்டுக் கேட்டாள், ''ஏங்க! நாம் இருவரும் ஆயுட் காலம்வரை ஒன்றாக வாழ்க்கை நடத்த வேண்டியவர்கள். இந்த ஒரு சிறு விஷயத்திற்காக மன வேற்றுமை ஏற்படுமாங்க?'' என்றாள்.

என் உடம்பெல்லாம் மயிர் குத்திட்டு நின்றது. இதோ பார் சாந்தி! நம்மனம் நம் உடலினுள்தான் இருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் புலன்களோ சுற்றும் சூழலை நோக்கித் தாவுகின்றது. இதனால் எம்மனம் எப்போது எப்படி மாறும் என்பதை எம்மாலேயே கூற முடியாது மனத்தை வசப்படுத்தும் சக்தி நம்மிடம் இருக்குமானால் உனக்கும் எனக்கும், குழந்தை இல்லையே என்ற ஏக்கமும், தவிப்பும் ஏற்படுவதற்கு எதுவேயில்லை: முனிவர்களும் காட்டிலிருந்து மனத்தை அடக்கி தவம் செய்யவேண்டிய அவசியமே இல்லை.'' என்றேன்.

''என்னவோ நான் எது சொன்னாலும் நீங்கள் அதற்கு ஒவ்வொரு விளக்கம் தந்துகொண்டிருக்கிறீர்கள்,'' என்று முணுமுணுத்தவாறே போய்விட்டாள் அவள்.

மறுநாள் நான் காரியாலயத்திலிருந்து வந்தேன். அடுக்களைப் பக்கமிருந்து வந்த குரல் என்னைப் பரவசத்தில் ஆழ்த்தியது. கூர்ந்து கேட்டேன் அக்குரலை, ''கண்ணன் வருவான் கதை சொல்லுவான் வண்ண வண்ண தொட்டில் கட்டித் தாலாட்டுவான்...'' என்னையறியாமலே என் கண்கள் பனித்தன. அடுக்களைப் பக்கம் எட்டிப் பார்த்தேன். என் மனைவிதான். காப்பியை ஆற்றியவாறே பாடிக் கொண்டிருந்தாள்.

''என்ன சாந்தி பாட்டுப் பாடுமளவிற்கு உன் மனம் பக்குவமடைந்துவிட்டதா? என்று தமாஷாகக் கேட்டேன்.

என்னைக் கண்டதும் துள்ளி ஓடிவந்த என்மனைவி, எனக்குக் குழந்தைகிடைத்து விட்டது என்று கூறி குதூகலித்தாள்.

'' எங்கே?... சாந்தி...'' வியப்புடன் கேட்டேன்நான்.

''இதோ'' என்று என்னைச் சுட்டிக்காட்டினாள். நான் திடுக்கிட்டேன்.

அவள் சொன்னாள். ''இதோபாருங்கள் நாமஉருவத்தில் பெரியவர்களாகிவிட்டால் என்ன? எமது உள்ளம் சிலசமயங்களில் குழந்தையாக மாறுகிறதல்லவா? அந்த உள்ளத இனி நிரந்தரமாகவே மாற்றிக் கொள்வோம். என்ன சரிதானே நான் சொல்வது?'' என்று என்னை உலுப்பினாள். என் உள்ளம் புளகாங்கிதம் அடைந்தது.

''ஆமாம் சாந்தி நாமே ஒருவருக்கொருவர் குழந்தையாக இருந்தால்...'' சொல்ல வார்த்தையின்றித் திணறினேன்.

அவள் என் மார்பில் சாய்ந்தாள். அக்குழந்தையை அள்ளியெடுத்து முத்தம் கொடுத்தேன்

அவள் திமிறிக் கொண்டு ஓடினாள். ஓடும்போது அந்த இனிய கீதத்தை இசை பாடிக்கொண்டு ஓடினாள். ''கண்ணன் வருவான்...''

(யாவும் கற்பனை)

# சங்கப் பலகை

## பூத்தது மானுடம்

**கவிஞர்: சாலை இளந்திரையன்**
**சாலை வெளியீடு. தில்லி 5.**
**விலை: ரூபா 3—00**

நெஞ்சோடு நெஞ்சம், விட்டகுறை தொட்டகுறை, செயல் மணக்கும் தோளகள், புதியதோர் நாகரிகம் என்ற பகுதிகளில் 157 கவிதைகள் இந்தத் தொகுப்பில் உள்ளன.

தமிழிலக்கிய உலகில் சாலை இளந்திரையனை அறிந்திராதவர்களை விரல் விட்டெண்ணிவிடலாம். சாலை இளந்திரையன் பல அரிய நூல்களின் ஆசிரியர். இளந்திரையன் கவிதைகள், அன்னை நீ ஆடவேண்டும், சிலம்பின்சிறுநகை, காவிரிதீரத்திலே... முதலியகவிதை நூல்களை எழுதியவர். திறனாய்வு நூல்களும், கட்டுரைகளும் படைத்தவர்.

புதிய கவிதைகளாக மலர வேண்டும் பூக்கவேண்டும் என்ற எண்ணம் இவர் கவிதைகளில் பூத்துக் கமழ்கின்றன.

''சிந்திக்கச் சிந்திக்கச்
செய்திகளைத் தரும்
செவ்வியதோழனே
பாட்டு—நெஞ்சு
தித்திக்கத் தித்திக்கப்
பேசித் துணைவரும்
தீவியதோழனும்
பாட்டு''

என்று அவர்தம் பாடலில் கலந்து விடுகிறார்— நம்மையும் கலந்துவிட வைக்கிறார்.

''கோடி உடல்கொண்டு
ஒருடலோ?—பல
கோடி நெஞ்சங்களில்
ஓர் நினைவோ
பாடி அடங்குவ
தோ இதுவோ?—பொது
பொதுமானுடம் பூத்தது
வே மெதுவே!

எனப் பூத்தது மானுடம் என்ற கவிதையிலே உயர்ந்த தத்துவத்தைக் கொணர்ந்து நம்மையும் சிந்திக்க வைக்கிறார்.

மானுட வாழ்க்கையில் சுதந்திரம் வேண்டும்; விரிந்த பரந்த நோக்குகள் வேண்டும்; தெளிந்த அறிவு வேண்டும் எனப் புகழும் கவிஞர் குறுகிய நோக்கங்களெல்லாம் சரிந்துவிழுகிறது எனக் கூறுகிறார்.

மானுட வாழ்க்கையின்
எல்லைப் பரப்பு
வளர்ந்து விரிகிறது—முன்பு
வைத்த வெளிப்புற
மண் சுவர் வேலி,
மடிந்து சரிகிறது
கூறுடையோன் விழி
கொண்டு கணித்த
குறிப்பு முடிகிறது—புதுக்
கொள்கை உதிக்கவே
கோள்களின் பார்வையில்
கூர்மை படிகிறது

என்று சாத்திரம் பார்க்கும் பழைய சமுதாயத்தின் கொள்கைகள், மத சம்பிரதாயங்கள் யாவும் சரிந்து விழட்டும்— புதியதோர் சமுதாயம் பூக்கட்டும் என்று பாடும்கவிஞர் இளந்திரையன் மூட பகுதியைப் பரப்பியவர்களுக்கே சவால் விடுகிறவராகக் காணப்படுகிறார்.

போலிச் சைவத்தைப் புகழ் வேண்டிப் பரப்பியவர்களுக்கு உண்மையான தமிழர் சித்தாந்தம் எது என இவரது கவிதைகள் காட்டுகின்றன.

சாலை இளந்திரையனின் கவிதைகளை பாமரர் முதல் பெரியோர்களும் படித்துப் பயன் பெறலாம். தமிழ் மக்களின் புது வாழ்வுக்கு ஒளி விளக்காக இந்த ''பூத்தது மானுடம்'' கவிதை நூல் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

—சக்தி

## முழுமதி நாட்களும் புதுமதி நாட்களும்

(இலவச வெளியீடு)

எழுதியவர்: என். சச்சிதானந்தன், 7, லோட்டன் ரோட் மானிப்பாய்.

திரு. சச்சிதானந்தன் அவர்கள், இச்சிறு ஆராய்ச்சி வெளியீட்டைத் தனது பெற்றோரின் நினைவாக வெளியிட்டுள்ளார். 1966ம் ஆண்டு எழுதப்பட்ட இந் நூல் இப்போதே வெளிவந்திருக்கிறது.

பட்சநாட்களை (போயா) இலங்கை அரசாங்கம் விடுமுறைநாட்களாக ஆக்கியிருப்பது பௌத்தர்களுக்கு மட்டுமல்ல இந்துக்களுக்கும் ஒருமைப்பட்டதேயாகும் என்பதை பல சான்றுகளுடன் இந்நூலில் ஆசிரியர் நிரூபித்துள்ளார்.

பட்சநாட்கள் பௌத்தர்களுக்குப்போலவே இந்துக்களுக்கும் விசேடநாட்கள் என்பதை பல ஆதாரங்களுடன் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். இந்து பௌத்த மதங்களுக்கிடையேயான தொடர்புகளையும் இந்நூலில் சுட்டிக்காட்ட ஆசிரியர் முயன்றுள்ளார்.

ஆசிரியரின் சோதிட, தத்துவசாத்திர அறிவு நூல்முழுவதையும் வாசிக்கும் போது பளிச்சிடுகிறது. இந்து. பௌத்த மதங்களிடைடயே நல்லெண்ணம் வளர்வதற்கு இந்நூல் உதவக்கூடியது.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

### வறுமைப்பிடியில்...

இந்த அவல நிலையைப் போக்குவதற்காகத்தான் குடும்பக் கட்டுப்பாடு என்னும் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

தற்போது நம் நாட்டில் கூட நடைமுறையில் குடும்பக்கட்டுப்பாட்டு இயக்கம் இயங்கி வருவதைக் காணலாம். இதன் கீழ் பல சங்கங்கள் இயங்கி, வானொலி மூலமும் வேறு வழிகளிலும் பிரசாரம் செய்து குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை செயலாற்றி வருகின்றன. ஆகவே அதிகம் பிள்ளைகளைப் பெறாமல் அளவோடு பெற்று அறிவூட்டி, சான்றோராக்கி எமக்கும், தமக்கும் தான் பிறந்த பொன்னாட்டிற்கும் பெரும் புகழைத் தேடிக் கொடுத்து வாழ்க்கையை செம்மைப் படுத்துவோமாக.



## கடைசி சில தினங்கள்

சென்ட்ரல் (கொழும்பு)   ராணி (யாழ்ப்பாணம்)   செண்ட்ரல் (பருத்தித்துறை)   ஈஸ்ட்டர்ன் (சம்மாந்துறை)

மொடர்ன் (குருநாகல்)   றேயல் (வவுனியா)

மற்றும் திரைகளில்

சிவாஜி, சரோஜாதேவி, நாகேஷ், பாலாஜி

—நடித்த—

# என் தம்பி

## விரைவில் எதிர்பாருங்கள்!!

ஜெய்சங்கர், ஜெயலலிதா, விஜயலலிதா, சோ, அசோகன்,

—நடித்த—

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்

# நீலகிரி எக்ஸ்பிரஸ்



## 2 வது ஜனத்திரள் வாரம்!

செல்லமகால் (கொழும்பு)   ஈரோஸ் (பாமன்கடை)   ஜசீமா (கிரான்பாஸ்)

இம்பீரியல் (மட்டுநகர்)   றீகல் (யாழ்ப்பாணம்)   வின்சர் (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ராமச்சந்திரன், ஜெயலலிதா, ராஜஶ்ரீ, நாகேஷ், நம்பியார், விஜயலட்சுமி நடிக்கும

# குடியிருந்த கோயில்

(ஈஸ்மன் கலர்)

## 8 வது வரம்! கெயிட்டி (கொழும்பு)

எம். ஜி. ஆர். நடிக்கும்

# ரகசிய பொலிஸ் 115 (ஈஸ்மன் கலர்)

## 3-வது வாரமாக காட்சிதருகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு)   பிளாசா (வெள்ளவத்தை)   விஜயா (மட்டுநகர்)

விஜிதா (அட்டன்)   மொடேன் (பதுளை)



எம். ஜி. ஆர்., சாவித்திரி

எம். ஆர். ராதா, ராகினி

நம்பியார், ராஜிசுலோசனு

நாகேஷ் நடிக்கும்

# பரிசு

★ இரண்டாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு பற்றிய விவரணப்படமும் காண்பிக்கப்படுகிறது. சென்னை அரசாங்கத்தின் சார்பில் எஸ். எஸ். வாசனால் தயாரிக்கப்பட்ட இந்த ஈஸ்மன் வண்ணப்படத்துக்கு மு. கருணாநிதி விவரண உரை வழங்கியுள்ளார். (கிங்ஸ்லியில் மட்டும்)

## 4-வது வாரமாக காட்சிதருகிறது!

லிடோ (பொரளை)

ஜனாதிபதி பரிசு பெற்ற சித்திரம்! (தகழி சிவசங்கரம்பிள்ளையின்)



# செம்மீன்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-ஆம் பெப்ரவரி மாதம் 1-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது: தொலைபேசி: 23612